விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 28 புதன்கிழமை (14.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 300

### ரிஷாட் பதியுதீனை கைது செய்ய

## பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன்ன நீதிமன்றப் பிடியாணை பெற்று கைது செய்யு மாறு சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித் துள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித தேர்தலில் வாக்களிக்க போக்கு வரத்துச் சபையின் பேருந்து களில் இடம்பெயர்ந் தோரை அழைத்துச் 23

### ரொனால்டோவுக்கு கொரோனா



23

### 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக

## கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் போர்க்கொடி

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தேச 20 ஆவது திருத்த சட்டமூலத்திற்கு எதிராக கத்தோலிக்க ஆயர்களும் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ள னர்.

புதிய அரசியலமைப்பை இயற்றும் பணிக்கு முன்னுரிமை வழங்குவதே சிறப்பு எனவும் 20ஆவது 23

### கொரோனா நிலைமையைக் கருத்திற் கொண்டு

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பு

| | |
|---|---|
| சீனி 1 கிலோ | 85 ரூபாய் |
| ரின் மீன் (பெரியது) ஒன்று | 200 ரூபாய் |
| பெரிய வெங்காயம் 1 கிலோ | 100 ரூபாய் |
| பருப்பு 1 கிலோ | 150 ரூபாய் |

பல அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி வரியை இன்று (நேற்று) நள்ளி ரவு முதல் நீக்குவதற்கு அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற் றுக்கு மத்தியில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை கருத்திற் கொண்டே இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஒரு அறிக் கையை வெளியிட்டுள்ள ஜனாதிபதி ஊடகப் பிரிவு; டின் மீன், பருப்பு, பெரிய வெங்காயம் மற்றும் சீனி ஆகியவற்றுக்கான விலைகளை குறைத்துள்ளது.

அதன்படி நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பெரிய ரின் மீன் ஒன்று 200 ரூபாவிற்கும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராம் 100 ரூபாவிற் கும் சீனி ஒரு கிலோ கிராம் 85 ரூபாவிற்கும் பருப்பு ஒரு கிலோ கிராம் 150 23

### மணிவண்ணனுக்கு

## எதிரான மனு

### மீளப் பெறப்பட்டது



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 23

### திருநெல்வேலியில்

## வாள்களுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல் வேலி பாற்பண்ணை வீதியில் சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது வாள்கள் 03 கைப்பற் றப்பட்டதுடன் சந் தேகநபர் ஒருவர் 23

## உடுவிலில் வீதியால் சென்ற வயோதிபப் பெண்ணைத் தாக்கி

### 4 பவுண் சங்கிலி அபகரிப்பு

(குப்பிழான்)

உடுவில் பகுதியில் வீதியால் சென்ற வயோதிபப் பெண்ணைத் தாக்கி அவர் அணிந்திருந்த நான்கு பவுண் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்களால் அறுத்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் நடந்துள்ளது.

மேற்படி சம்பவம் 23

### கம்பஹா ஆடைத் தொழிற்சாலையால்

# 21 மாவட்டங்களுக்கு கொரோனா பரவியுள்ளது

(கொழும்பு)

கம்பஹா, மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய கோவிட்-19 கொத் தணி 21 மாவட்டங்களில் பரவி யுள்ளது என சுகாதார அமைச் சின் ஊடக பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்தார். 23

### இயக்கச்சியில்

## 9 பேருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற் றுப் பரிசோதனை 23

### மணப்பெண்ணுக்கு கொரோனா

## மாப்பிள்ளை, திருமணப் பதிவாளர் உட்பட 14 பேர் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

வியாங்கொட பகுதியைச் சேர்ந்த திருமணமான மணப் பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவரது கணவர் உட் பட 14 பேர் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

மினுவாங்கொடை பிரண் டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை நிறுவனத்தில் பணிபுரி யும் வியாங்கொட 23

## நாட்டில் மேலும் 194 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

### மொத்த பாதிப்பு 5 ஆயிரத்தை கடந்தது

(கொழும்பு)

நாட்டில் நேற்று 194 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையா ளம் காணப்பட்டவர் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



பிறப்பு
04 – 07 – 1926

இறப்பு
13 – 10 – 2020

# கதிர்காமு நீலப்பிள்ளை

யாழ். வரணி, நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு நீலப்பிள்ளை நேற்று (13.10.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் வள்ளியம்மை, காலஞ்சென்ற கதிர்காமு, கந்தசாமி, காலஞ்சென்ற செல்வராசா, தங்கராணி (கனடா), இரத்தினசிங்கம், சிறீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாணிக்கதியாகராஜா, மகேஸ்வரி (கனடா), முத்துலிங்கம் (கனடா), யசோதா, சாந்தநிதி, சபேசன், சபேதினி, பகீரதன், லோஜிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் குலசபாநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரவணபவன், மஞ்சுளா (ஜேர்மனி), மதுரா (இலண்டன்), சிவதர்சினி, சரிதா (கனடா), செந்தூரன், பிரதீபன் (கனடா), நிறூஜன் (கனடா), டசினா (கனடா), விஜிதா (ஜேர்மனி), முகுந்தா (கனடா), கஜேந்தினி (கனடா), சிந்துஷா (கனடா), லக்சணன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற லஜிந்தன், லசித்திரன், லலிதன், லகிர்தா, றொபியா (அமெரிக்கா), லதுஷா, தனுஷா, அகிலா, கிருபாகரன், சுரேசரட்ணம், மயூரன், உதயநந்தன், கீர்த்தி, கௌசிகா, கம்சிகா, பாஸ்கரன், றமேஸ்வரன், தகேசன், யசீலன், நந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் அஸ்வினா, அட்சரன், தேனுஷன், ஆருஷன், விபூசிகா, அகீஷன், கிருஷ்ணவி, லக்ஷரா, தருஸ், சனார்த்தா, உதேஸ், ஆருஹி, திசிக்கா, கிபிசன், பபிசன், றபிசன், சிபிகா, கபிகா, விதுன், றதுஷா, றதுன், சாயிற்றா, சாயிஷன், லிஷான், அஸ்மித், அஸ்விந் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் த்கனக்கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாவற்காடு,
வரணி,


ராணி (மகள்) - 0016477833923
சிறீ (மகன்) - 077 616 4303
ரத்தினம் (மகன்) - 077 226 1679

தகவல்:
குடும்பத்தினர்

(C-519)

# இலங்கை- இந்திய உறவுகளை எந்தத்தரப்பும் பிரிக்க முடியாது

## சம்பந்தன் திட்டவட்டம்



(கொழும்பு)

இலங்கையும் இந்தியாவும் சரித்திர ரீதியில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது. இந்த இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவை எந்தத் தரப்பும் அல்லது எந்த நாடும் பிரிக்கவே முடியாது. அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கவும் மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் காணொளி ஊடாக அண்மையில் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தையே நீக்க வேண்டும் என்று ராஜபக்ஷ அரசிலுள்ள முக்கிய அமைச்சர்கள் வலியுறுத்தி வரும் நிலையில், மோடியின் இந்த நிலைப்பாட்டால் அதிருப்தியடைந்து இராஜதந்திர ரீதியிலான பதிலடியை வெளிக் காட்டுவதற்காகவா, சீனத்தூதுக் குழுவை இலங்கை அரசு அவசர அவசரமாகச் சந்தித்தது என்று அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் இரா.சம்பந்தனிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சீனத் தூதுக்குழு எதற்காக இலங்கை வந்தது? அந்தக் குழுவை இலங்கை அரசு ஏன் அழைத்தது? உண்மையில் இரு தரப்பும் நேரில் என்ன பேசினார்கள்? என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது.

ஆனால், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள உறவை எந்த தரப்பும் அல்லது எந்த நாடும் முறிக்கவே முடியாது. இலங்கையின் அயல் நாடு இந்தியா. இன ரீதியில் - மொழி ரீதியில் - மத ரீதியில் - கலாசார ரீதியில் இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்புண்டு.

அதற்கமைய இலங்கையிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின மக்களும் பெருமளவில் இந்தியா சென்று வருவார்கள். அதேபோல் இந்தியாவைச் சேர்ந்த மக்களும் இலங்கை வந்து போவார்கள். இது அன்று தொட்டு இன்று வரை தொடர்கின்றது. இதை எவரும் தடுக்க முடியாது.

இந்தியா வல்லரசு நாடு. இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடு. எனவே, இந்தியாவிடமிருந்து சகல உதவிகளையும் இலங்கை பெற முடியும்.

அதேபோல் தேசிய இனப் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பில் இலங்கைக்கு இந்தியா கூறும் அறிவுரைகளையும் ஆட்சியிலுள்ள அரசு கேட்டு நடக்க வேண்டும். அதனைப் புறக்கணிக்கும் வகையில் இலங்கை அரசு செயற்படக்கூடாது.

இலங்கையின் அரசியல், அபிவிருத்தி மற்றும் பொருளாதாரம் எனப் பல துறைகள் தொடர்பில் இந்தியா அதிக சிரத்தை கொண்டுள்ளது.

இதை நாம் வரவேற்கின்றோம்" எனத் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## பரீட்சைகள் நிறுத்தம் பதிவு நடவடிக்கை தொடரும்

### திறந்த பல்கலை.அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தாக்கம் காரணமாக திட்டமிடப்பட்டிருந்த அனைத்து பரீட்சைகளும் பிற்போடப் பட்டுள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

மேலும் திட்டமிடப்பட்ட பதிவு மற்றும் மீள்பதிவு நடவடிக்கைகள் தொடரும் எனவும் அறிவித்துள்ளது.

அத்துடன், ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெறும் என்பதுடன், எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னரே பரீட்சைகள் தொடர்பாக அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்படும் பரீட்சைகள் தொடர்பாக ஒருவார கால குறுகிய காலத்தில் திறந்த பல்கலைக்கழகத்தினது இணையத் தளத்தில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

## தாய்க்கும் சேய்க்கும் கொரோனா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி விடுமுறையில் சென்றுள்ள கம்பஹாவை வசிப்பிடமாகக் கொண்ட பெண் தாதிக்கும், அவரது 10 மாத கைக்குழந்தைக்கும் கம்பஹாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் தனது கைக்குழந்தையையும் குடும்பத்தினரையும் பார்ப்பதற்காக அவ்வப்போது விடுமுறையில் கம்பஹாவிற்குச் சென்று வருவதுண்டு என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கமைய குறித்த தாதி உத்தியோகத்தர் கடந்த 4 ஆம் திகதி விடுமுறை பெற்றுக் கொண்டு தமது சொந்த ஊரான கம்பஹாவிற்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த 9 ஆம் திகதி அவரும் அவரது கைக்குழந்தையும் உடல் நலக் குறைவு காரணமாக கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தாய்க்கும் சேய்க்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, மட்டக்களப்பில் குறித்த தாதி கடமையாற்றிய ஒரு பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ஐ-4)

## வைரஸைக் கட்டுப்படுத்துவதில் உலக நாடுகள் கவனம் 20 வது திருத்தத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கம்

### பௌத்த பீடங்கள் தங்களது நிலைப்பாட்டையும் அறிவிக்க வேண்டும்



(கொழும்பு)

**உலக நாடுகள் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியை கண்டுபிடிக்க முயற்சித்து வருகையில், இலங்கை அரசாங்கம் கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கே முயற்சித்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

இதேவேளை 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் நாடு அராஜகமுறைக்கு செல்லும் என்றும் தற்போது 20 ஆவது சட்டமூலத்திற்கு எதிராக அமரபுர ராமான்ய பீடத்து தேரர்கள் தங்களது கருத்தை தெரிவித்தது போன்று, ஏனைய பீடங்களும் அவர்களது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முழு நாடே அச்சத்தில் இருக்கும் போது, அரசாங்கம் அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சித்து வருகின்றது.

ஏனைய உலக நாடுகள் வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்காக தடுப்பூசிகள் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், இந்நாட்டு அரசாங்கம் அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலே கவனம் செலுத்தி வருகின்றது.

வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நாடுகளின் இலங்கைக்கு இரண்டாம் இடம்வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு சில தினங்களில் வைரஸ் பரவல் அதிகரித்துள்ளது.

20 ஆவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் அது பாரிய நெருக்கடிகளை தோற்றுவிக்கும் என்றும், அதனால் நாட்டுக்கு முழு அரசியலமைப்பு வரைபொன்றே தேவை என்றும் இலங்கை அமரபுர, ராமான்ய பீடத்து தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர். இவர்கள் கூறியுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்திற்கு தெரிவிக்கின்றோம்.

இதேவேளை, 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக ஏனைய பீடங்களும் தங்களது நிலைப்பாட்டை நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## ஆஜரானார் ரணில்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு வில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையானார்.

குறித்த ஆணைக்குழு வில் கடந்த 6 ஆம் திகதி முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், சுகயீனம் காரணமாக பிறிதொரு தினத்தினை கோரியிருந்தார்.

இதற்கமைய நேற்றைய தினம் அவர் அங்கு முன்னிலையாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, நேற்று முன்தினம் குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியம் வழங்கிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க வின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக் களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# பயங்கரவாதத்தில் பற்றற்ற எனக்கு நீதியைப் பெற்றுத் தாருங்கள்

## ரியாஜ் பதியுதீன் ஜனாதிபதிக்கு கடிதம்

**(கொழும்பு)**

**நான் எப்போதும் அரசியல் மற்றும் பயங்கரவாதத்தில் இருந்து விலகிச் செல்லும் உறுதியுடன் இருக்கும் நபர் என்பதால் எனக்குக் கிடைக்க வேண்டிய நீதியைப் பெற்றுத் தாருங்கள் என உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடர்பு உண்டு என கடந்த ஐந்து மாதங்களாக சி.ஐ.டியினரால் கைது செய் யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்ட ரியாஜ் பதியுதீன் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.**



ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது கடிதத்தில்,

கொழும்பு வர்த்தகர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்த முஹம்மது இப்ராஹிமின் மகனான இன்ஷாப் அஹமதுடன் நான் தொலைபேசி தொடர்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், கடந்த 2020 ஏப்ரல் 14 ஆம் திகதி புத்தளத்தில் உள்ள எங்கள் வீட்டில் வைத்து குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தேன் என்பது உங்களுக்கு நன்கு தெரியும்.

இன்ஷாப் அஹமட் என்பவர் எனது சொந்த ஊரான மன்னாரைச் சேர்ந்த மற்றொரு முக்கிய தொழிலதிபரான எஸ்.கே.பி.அலாவுதினின் மகளை திருமணம் செய்து கொண்டார். இதையடுத்து, நான், சி.ஐ.டியினரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தேன். நான் கைது செய்யப்பட்ட அதே நாளில், இன்ஷாப் அஹமதுடன் தொலைபேசி உரையாடல்கள் நடத்தினார்கள் என்ற அடிப்படையில் மேலும் 6 பேரும் சி.ஐ.டி. யினரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதை உங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

2020 ஏப்ரல் 14 ஆம் திகதி நான் உட்பட கைது செய்யப்பட்ட 7 பேரில் 3 பேர் எனக்கு முன் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் முபீன் மற்றும் அமானுல்லா ஆகியோரை விடுவிக்குமாறு கோரி, 01.06.2020 தினத்தன்று சி.ஐ.டி.யினர் நீதிமன்ற உத்தரவையும் கோரியிருந்தனர்.

இதன்போது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட எவராவது ஒருவர் விசாரணையின் பின்னர் அவர் மீது குற்றங்கள் ஏதும் நிரூபிக்கப்படாவிட்டால் அவரை விடுவிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை என்ற காரணத்தினால் அவர் நிரபராதியாக இருந்தால் கைது செய்த சி.ஐ.டியினர் அவரை விடுவித்துவிட்டு நீதிமன்றத்துக்கு அந்த விடயத்தை தெரியப்படுத்தினால் போதுமானது என்று நீதவான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தார்.

அனைத்து விசாரணைகளின் முடிவுகளையும் தொடர்ந்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் எனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சி.ஐ.டி.யினர் பரிந்துரைத்ததன் பேரில், மேற்கண்ட நீதிமன்ற உத்தரவின்படி 29.09.2020 தினத்தன்று நான் விடுவிக்கப்பட்டிருந்தேன்.

நான் தடுப்புக்காவலில் இருந்த காலப்பகுதியில் எனது தொலைபேசிகள், கணனிகள், வியாபாரத் தளங்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்பான முழுமையான விசாரணையை சி.ஐ.டி.யினர் மேற்கொண்டிருந்தனர். மேலும், கொழும்பில் உள்ள எனது வீடு, புத்தளத்தில் உள்ள எனது மனைவியின் பெற்றோருக்கு சொந்தமான வீடு, இன்னும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள எனது நண்பர்களின் வீடுகள் மற்றும் மன்னாரில் உள்ள எனது தாய்க்கு சொந்தமான வீடு போன்றவற்றிலும் சி.ஐ.டி. யினர் தேடுதல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எனது சகோதரர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான றிசாத் பதியுதீன் அரசியல்வாதி என்பதனால், எனது பிரச்சினையை அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள், அவர்களது அரசியல் நலனுக்காக எனது விடுதலையை பயன்படுத்திக் கொள்கின்றார்கள் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இது நான் உட்பட எனது குடும்பத்தினரது பொது வாழ்க்கைக்கு மிகப் பெரியதொரு தடையாக உள்ளது.

அண்மையில் முன்னர், ஆளுங்கட்சியின் நூறு பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர். அதில் என்னை மீண்டும் கைது செய்து விசாரிக்குமாறும் கோரியுள்ளனர்.

எவ்வாறாயினும் அரசியல் மற்றும் குரோத உணர்வுடைய மதவாதிகள், இனவாதிகள் தமது சொந்த நலன்களை அடைந்துகொள்ள மேற்கொள்ளும் முயற்சியாகவே இது உள்ளது.

அத்துடன், சி.ஐ.டி.யினரது நடத்தையை சந்தேகத்துக்குரியதாக சித்திரிக்கவும், எந்த அடிப்படையும் இல்லாமல் என்னை ஒரு பயங்கரவாதியாக இழிவுபடுத்தவும் இந்த முயற்சியை நான் கருதுகிறேன்.

ஆகையால், எனது விடயத்தில் நீங்கள் தலையிட்டு, நான் எப்போதும் அரசியல் மற்றும் பயங்கரவாதத்திலிருந்து விலகிச் செல்லும் உறுதியுடன் இருக்கும் ஒரு நபர் என்பதால், எனக்குக் கிடைக்க வேண்டிய நீதியைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

அரசியல் மற்றும் சமூகவாத காரணங்களால் என்னை மீண்டும் கைது செய்வதற்கான கோரிக்கைகள் திட்டமிடப்பட்டு, அரங்கேற்றப்படுகின்றன என்பதையும் தங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஜாலியவின் இடமாற்றம் இரத்து



(கொழும்பு)

பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளராகவும் ஊடகப் பேச்சாளராகவும் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன வடக்கின், காங்கேசன்துறை பொலிஸ் வலயத்துக்கு இடமாற்றப்பட்ட நிலையில் அந்த இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக, அவரை வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக இவ்வாறு காங்கேசன்துறை பொலிஸ் வலயத்துக்கு இட மாற்றுவதாக பொலிஸ் ஆணைக்குழு அறிவித்திருந்த நிலையில், அந்த இடமாற்றம் இரத்துச் செய்யப்படுவதாக அதே ஆணைக்குழு மீள அறிவித்துள்ளது.

அதன்படி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன, பொலிஸ் தலைமையகத்தின், பொலிஸ்மா அதிபரின் கொவிட்-19 கட்டுப்பாட்டறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினதாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன் விவகாரத்தில், கைதின் போதும், விடுதலையின் பின்னரும் பொலிஸ் பேச்சாளராக ஜாலிய சேனாரத்ன வெளியிட்ட கூற்றுக்கள் பல்வேறு தரப்பினரால் விமர்சிக்கப்பட்டன. இது தொடர்பில் பாராளுமன்றில் உள்ளக பாதுகாப்பு விவகார இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் அதிருப்தி வெளியிட்டதுடன் பொலிஸ் பேச்சாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே, ஜாலிய சேனாரத்ன பொலிஸ் பேச்சாளர் பதவியிலிருந்து மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## வீரவன்ச ஒரு மோசடியாளர்

(கொழும்பு)

விமல் வீரவன்ச என்பவர் ஒரு மோசடியாளர் எனவும் அவரது அடுத்த இலக்கு ராஜபக்ஷவினரை வீட்டுக்கு அனுப்புவது எனவும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

தனது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

விமல் வீரவன்சவை விட பெரியவர்கள் ராஜபக்ஷவினரை வீட்டுக்கு அனுப்ப முயற்சித்ததாகவும் அது முடியாமல் போனது எனவும் வீரவன்ச கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் எனவும் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் அவரை சார்ந்த சிங்கள தேசிய அமைப்புகள் 20 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் பசில் ராஜபக்ஷ தரப்பினரை கடுமையாக விமர்சித்து வருவதுடன் இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகும் யோசனையையும் எதிர்த்து வருகின்றனர். இதன் காரணமாக ஆளும் கட்சிக்குள் விமல் வீரவன்சவுக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. (ஜ-4)



# ஏகாதிபத்திய பாதையில் நாடு

## மீட்டெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு



(கொழும்பு)

நாடு ஏகாதிபத்திய பாதையை நோக்கி செல்வதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன, இந்த பாதையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக அனைவரையும் ஒன்றிணையுமாறும் அழைப்பு விடுத்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு அழைப்பு விடுத்த அவர் மேலும் கூறியதாவது, அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசாங்கத்தின் உதவியாளர்களாகவே செயற்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

நாடு தற்போது ஏகாதிபத்திய பாதையை நோக்கியே சென்றுக் கொண்டிருக்கின்றது. இந்த பாதையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்கள்தொடர்பில் உயர்நீதிமன்றம் பரிசீலனைகளை செய்திருந்தது.

இது தொடர்பான தீர்ப்பை உயர்நீதிமன்றம் முதலில் ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கே தெரிவிக்கும். பின்னர் அவர்கள் ஊடாகத்தான் தீர்ப்பு தொடர்பான தகவல்களை எமக்கு பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆனால், இந்த உயர் நீதிமன்ற தீர்ப்பு தற்போது சமூக வலைத்தளாங்கள் ஊடாக பகிரப்பட்டு வருகின்றது. அது எவ்வாறு சமூகவலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. யார் அந்த தகவல்களை வழங்கியது என்பது தொடர்பில் எந்த வித தகவலும் இல்லை.

வெளிநாடொன்றில் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தால், சம்பந்தப்பட்ட தரப்பினரை கைது செய்து சிறை வைத்திருப்பார்கள்.

ஆனால், இங்கு அத்தகைய எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவில்லை. இந்நிலையில் இதனை உயர் நீதிமன்ற நீதிபதிகள் வெளியிட்டார்களா? இரட்டை பிரஜாவுரிமை வைத்துக் கொண்டிருப்பவர்கள் வெளியிட்டார்களா? அல்லது மொட்டு அணியினர் வெளியிட்டார்களா? என்பது தொடர்பில் எமக்கு தெரியாது. ஆயினும் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும்.

"ஒரே நாடு ஒரே சட்டம்" என்று அரசாங்கம் கூறிவந்தாலும், அதனை ஆளும் தரப்பினரே கடைப்பிடிக்கின்றார்களா? என்பது சந்தேகமாகவே இருக்கின்றது.

நாட்டு மக்கள் அனைவருமே கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்கல் சட்டவிதிகளை கடைப்பிடித்துவரும் நிலையில், ஆடைத் தொழிற்சாலைக்கு இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட ஊழியர்களுக்கு அந்த சட்டவிதிகள் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

அதற்கு பிரதான காரணம் அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கத்தினுடனான உறவே முக்கியமாகியுள்ளமையே.

இதேவேளை, சீனாவிலிருந்து வந்த உயர் அதிகாரிகள் தொற்றுநீக்கல் சட்டவிதிகளை கடைப்பிடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இருக்கவில்லை. அது தொடர்பில் ஆளும் தரப்பினரிடம் கேள்வி எழுப்பினால் "அத்தகைய உயர் அதிகாரிகளை எவ்வாறு , தொற்றுநீக்கல் சட்டவிதிகளை கடைப்பிடிக்குமாறு கூறமுடியும் என்று சுகாதார அமைச்சர் கூறுகின்றார்.

இதுதான் நாட்டின் நிலைமை. இந்நிலையில் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தமும் நிறைவேற்றப்பட்டால் என்ன நடக்கும் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டிய தருணம் இது. அதனால் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணையுங்கள் என அழைப்பு விடுத்தார். (ஜ-4)

# சுற்றுலாப்பயணிகள் பார்வையிடல் நிறுத்தம்

(கொழும்பு)

ரம்புக்கன பின்னவல திறந்த மிருகக்காட்சிச்சாலை மற்றும் பின்னவல யானைகள் சரணாலயம் என்பவற்றில் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்பொழுது நிலவிவரும் கொவிட் - 19 வைரஸ் தொற்று அனர்த்தம் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக அடிப்படையில் யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை என்பன மூடப்படுவதாக மிருகக் காட்சிச்சாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இஷினி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு மூடப்பட்ட போதிலும் சகல நிர்வாக நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)


# சுகாதார நடைமுறைகள் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் வெளிநாட்டு பிரதிநிதிகளின் வருகையின்போதும் கடைப்பிடிக்கப்படுவதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், வெளிநாட்டு பிரஜைகளின் வருகை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், "சில நாடுகளின் கருத்துக்களுக்கமைய, விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நீண்ட காலம் தனிமைப்படுத்தலுக்கு



உட்படுத்தப்பட்டதன் பின்னர் அவர் வேறு எந்தவொருவருடன் தொடர்புகள் இன்றி ஏனைய நாடுகளுக்கு பிரவேசிக்கும் சந்தர்ப்பங்கள் பல உலகளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று வெளிநாட்டு இராஜதந்திரிகள் நாட்டுக்குள் பிரவேசிக்கும்போது, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டில் எவ்வாறு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றதோ அதேபோன்று எமது பக்கம் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வெளிநாட்டு ராஜதந்திரிகள் நாட்டுக்குள் பிரவேசிக்கும் போது சுகாதார பாதுகாப்பு நடைமுறைக்கமைய வேறு எந்தவொரு சமூகத் தொடர்பும் இன்றி குழுவாக பயணிப்பதற்கான சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

இதன் காரணமாகத்தான் இவ்வாறான தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களின் போது அரசாங்கம் என்ற ரீதியில் சில வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்திக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது" என அமைச்சர் ரமேஷ் பத்திரன மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# எலிக்காய்ச்சலால் பெண் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவிலுள்ள ரிதீதென்ன 2 ஆம் பரம்பரைக் கிராமத்தில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ரிதீதென்ன 2 ஆம் பரம்பரை குடியேற்றக் கிராமத்தைச் சேர்ந்த முஹம்மது இஸ்மாயில் நுஷ்ரத் (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்தார். (ஜ-4)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர். கோபாலபிள்ளை மகாலட்சுமி



அன்னை மடியில்
24 . 12 . 1952

ஆண்டவன் அடியில்
14 . 09 . 2020

நாட்கள் ஓடி மாதமானது
நினைவுகள் கூடி பாரமானது
கேட்காமல் உன் குரல்
மனம் வாடுது
கண்போல் இருந்தவுனை
நாமிழந்துகலங்குகின்றோம்
வருவாயோ அம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"தாயகம்"
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(4258)

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் களவுச் செயல்களில் ஈடுபட்டு வந்த இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் சமையல் எரிவாயுவினைத் திருடி அதனை விற்க முற்பட்ட போதே பொலிஸார் அவரை கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர் ஏற்கனவே சாவகச்சேரி நகர் பகுதியில் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-4-30)

# வடக்கு மாகாண அரச சாரதிகள் கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அரச சாரதிகள், கவனயீர்ப்பு போராட்டமொன்றை நேற்று முன்தினம் யாழில் முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சாரதிகள் விடயத்தில் அரசியல் தலையீடுகள் புகுத்தப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள அவர்கள், தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்த சாரதிகள் கையளித்தனர்.

இடமாற்றம் வழங்கப்பட்ட 35 சுகாதார திணைக்கள சாரதிகளில், 25 சுகாதார திணைக்கள சாரதிகள் குறித்த இடமாற்றக் கட்டளையை பின்பற்றாமல் உள்ளதோடு, தங்களை வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்வதனை நிறுத்துமாறும், தங்களது இணைந்த சாரதி சேவையை மூடிய சுகாதார சேவையாக்குமாறும் கோரிக்கை முன்வைத்து சுகயீன விடுமுறையில் ஈடுபட்டுள்ளனர்.

சுகாதார சேவைகள் சாரதிகளினது நீதியற்றதும், குறுகிய மனப்பான்மை கொண்டதுமான கோரிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே குறித்த போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தின் நிறைவில், வடமாகாண ஆளுநர் மற்றும் சுகாதார அமைச்சு, உள்ளூராட்சி அமைச்சுக்களுக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது. (5-4-101)

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு பல்வேறு அமைப்புகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கோணாவில் முறிப்பு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் அறுக்கப்பட்டு கடத்தப்படும் திருட்டுச் சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இருவர் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது.

ஊடகவியலாளர்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் வலியுறுத்தி பல்வேறு தரப்பினர் தமது கண்டனங்களை வெளிப்படுத்திவருகின்றனர்.

அந்த வகையில் வவுனியா ஊடக அமையம் , மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ். ஊடக மன்றம் ஆகியவற்றுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சோ. சேனாதிராசா, வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் தமது கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இனிவரும் காலங்களில் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுமாயின் அரசும் பொறுப்பு வாய்ந்த அமைச்சுக்களும் பொறுப்புக் கூற வேண்டும் என கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

இக் கடிதத்தை கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி)

# பத்திரிகைகள் பார்வையிட முடியும்

(கரணவாய்)

வடமராட்சி செம்பியன் சனசமூக நிலையத்தில் தினமும் நாளாந்த பத்திரிகைகளைப் பார்வையிட முடியும் என சனசமூக நிலையச் செயலாளர் எஸ்.பிரசாந் அறிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வலம்புரி, காலைக்கதிர் பத்திரிகைகளை தினமும் காலை 7.30 மணி முதல் மாலை 5 மணிவரை பார்வையிட முடியும்.

இதற்கான அனுசரணையை சனசமூக நிலைய செயலாளர் எஸ்.பிரசாத் மற்றும் உப தலைவர் ஜே.ரெஜி ஆகியோர் வழங்கியுள்ளனர். (5-4-60)

# விபத்தில் ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு முன்பாக ஏ9 வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கடற்படையின் பிக்கப் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன மோதி விபத்து ஏற்பட்டது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மட்டுவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 45 வயது ர.கேதீஸ்குமார் என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-30)



கொரோனாத் தொற்றுக் காரணமாக முடக்கப்பட்டிருக்கும் வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த 110 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (படம்:- ரவிசாந்)

# அறிவுத் திருக்கோவில் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலின் நான்காம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இணைய வழி மூலம் (ZOOM) நாளை 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

இந் நிகழ்வில் தலைமையுரையை மனவளக்கலைஞர் பேராசிரியர் சி. முருகானந்தவேல் வழங்குவார்.

சிறப்புரையை சொல்வேந்தர் சுகிசிவம் (தமிழ்நாடு) "மனவளம் முழுநலம்" என்னும் தலைப்பில் வழங்குவார்.

இந்நிகழ்வில்கலந்து கொள்ள விரும்புவோர். ZOOM ID-95 06786590 password - vetha இன் ஊடாக கலந்து கொள்ள முடியும். இந் நிகழ்வுகளை துணை பேராசிரியர் த. நந்தகுமார் தொகுத்து வழங்குவார். (5)

# ஒய்வூதியத் திணைக்களத்தின் அறிவிப்பு

(கொழும்பு)

ஓய்வூதியத் திணைக்களத்தின் வளாகத்துக்கு சேவை பெறுநர்கள் வருகை தருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ. ஜகத் டீ.டயஸ் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று முதல் மறு அறிவித்தல் வரை, ஓய்வூதியத் திணைக்களத்தின் வளாகத்துக்கு சேவை பெறுநர்கள் வருகை தருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய சேவைகளை 1970 எனும் துரித அழைப்பு இலக்கத்தின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இன்று டோக்கன் நாளை உரமானியம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் ஊடாக வழங்கப்படும் உரமானியம் நாளை 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

எனவே உரமானியத்தைப் பெறவரும் விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட டோக்கன், ஏக்கர்வரி செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றையும் கொண்டு வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

உரமானியம் பெறுவதற்கான டோக்கன்கள் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கமக்கார அமைப்பின் தலைவரது இல்லத்தில் வைத்து இன்று புதன்கிழமை வழங்கப்படும் என கமக்கார அமைப்பின் செயலாளர் ந.கஜேந்திரகுமார் அறிவித்துள்ளார்.

உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4)

# தொற்றாளர் நடமாட்டம்
## மூடப்பட்டது வர்த்தக நிலையங்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபர்கள் பலர் நடமாடியதன்காரணமாக கொழும்பின் பிரதான நகரங்களில் ஒன்றான பொறளையில் 6 வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை யடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக நேற்றுக் காலை ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பேசிய அவர், தற்போது நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்திருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளான நபர்கள் பலர் நடமாடியதன் காரணமாக கொழும்பின் பிரதான நகரங்களில் ஒன்றான பொறளையில் 6 வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இந் நிலையில், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் நீங்கிய பின்னர் இந்த வர்த்தக நிலையங்கள் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-7)

# வீடுகள் நிர்மாணிக்கும் செயற்றிட்டம்

(கொழும்பு)

நடுத்தர குடும்பங்களுக்கு ஐயாயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, இது தொடர்பான கலந்துரையாடலொன்று, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்படி, இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

குறித்த வேலைத்திட்டம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் எண்ணருக்கருவுக்கு அமைய, மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள TOSHIBA 306 போட்டோ கொப்பி மெசின் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 358 1916**

(4256)





## நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை தெரிவு செய்ய விரும்புபவரா?

- முழு நேர வேலையில் இணைந்து கொள்ளலாம்
- ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
- அரச உத்தியோகத்தவர்களும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

உங்களின் எதிர்காலத்தினை வெற்றிகரமானதாக மாற்றிட ஆசியாவின் காப்புறுதி ஜாம்பவானுடன் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை அமைத்துக் கொள்ளும் நோக்கம் கொண்டவரா? உங்களுக்கே சொந்தமான வாகனம், வீடு, உலகம் முழுவதும் வலம்வரும் வாய்ப்பு மற்றும் உங்களின் கனவுகளை குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யும் விடாமுயற்சி இருப்பின் ஆசியாவின் மிகப்பெரிய காப்புறுதி வழங்குநருடன் AIA வெல்த் பிளேனராக கைகோர்த்து நீங்கள் விரும்பிய அளவு சம்பாதிக்கும் திறனுக்கு உங்களை பலப்படுத்திக் கொள்ளுங்கள்.
உங்கள் பயணத்தினை இப்பொழுதே ஆரம்பியுங்கள்.

(4259)

வயது 20-60
கல்வி தகைமை
G.C.E ,A/L

**AIA INSURANCE LANKAPLC**
**NO 62/6 STANLEY ROAD, JAFFNA**
**T.P: 077 316 4549**



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: 35 3/4 செவ் 11 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Civil, தொழில் நுட்பவியலாளர் (அரச)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/8917

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 52 1/2 செவ் 7 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/8906

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: 77 செவ் 3 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தபால் அதிபர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/8910

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 50 செவ் 7 இல் உயரம்:5'10"
தகைமை/தொழில்:க.பொ.த.சா/த. சவுதி அரேபியாவில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/8916

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 78 செவ் 10 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச உத்தியோகத்தர் மட்டும்
தொ.இ: G/940

பிறப்பு: 1981 இந்து (சைவபோசணம்)
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: 51 1/4 செவ் 7 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தனியார் வங்கி, அரச உத்தியோகம் உள்ள பட்டதாரி மணமகன்
தொ.இ: G/950

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 81 செவ் 1 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: தகுந்த தொழில் செய்பவர்
தொ.இ: G/970

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா: 21 செவ் 10 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பொறியியல் பட்டதாரி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:. பட்டதாரி தகுந்த உத்தியோகத்தர்
தொ.இ: G/6106

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING [CODL]

### VACANCY: Post of Moodle Coordinator (On Contract Basis) [One Year]

Application are invited by me up to 06.11.2020 from suitably qualified persons for the post of Moodle Coordinator **on contract basis** for one year to handle Moodle Learning Management System in the Centre for Open and Distance Learning [CODL], University of Jaffna.

**Requirements:**

The Candidate should possess the followings:

- A relevant Degree from a recognized University such as B.Sc in Computer Science or IT related Degree

**or**

- Higher National Diploma in Computer Science from a government institution or equivalent

**and**

- Excellent written and verbal communication skills in English
- Experience in Online Learning methods and Moodle LMS at the Administrative Level
- Highly organized and detail oriented personality.
- Ability to self-direct and manage time.
- A demonstrated ability to plan and manage complex projects.
- Knowledge in windows/Unix programming.
- Knowledge in html codes, Data base programming scripting languages [php/asp] is desirable.

Salary: Rs. 56,800/- (fixed) per month.

Age: Below 45 years


Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants should deposit Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Account No. 162-1-001-6-0000880**.

Only applications sent on the **specified** form will be accepted. (**Please annexed copies of relevant documents**). The envelope containing the duly filled application form must bear "**Post of Moodle Coordinator-Centre for Open and Distance Learning**" on its top left hand corner and either be hand delivered or sent under registered post to reach the Office of the Registrar, P.O.Box 57, Thirunelvely, Jaffna **on or before 06.11.2020.**

REGISTRAR
University of Jaffna,
Jaffna.

(C-517)

# சைக்கிள் திருத்துமிடம் விசமிகளால் எரிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் சாந்தசோலை உப வீதியில் அமைந்துள்ள சைக்கிள் திருத்தகத்தை நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத விசமிகள் தீயிட்டு எரித்துள்ளனர்.

குறித்த சைக்கிள் திருத்துமிடம் தீயில் எரிவதை அவதானித்த அயலவர்கள் கடை உரிமையாளருக்கு தகவல் தெரிவித்ததுடன், நகரசபையின் தீயணைப்பு பிரிவினருக்கும் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற தீயணைப்பு பிரிவினர் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

குறித்த விபத்தினால் சைக்கிள் திருத்துமிடம் முற்றாக எரிந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-4-299)

# பிற்போடப்பட்டது

(நெளுக்குளம்)

கொரோனா அச்சுறுத்தல் காணப்படும் நிலையில் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகளை பிற்போட்டுள்ளதாக வவுனியா மத்தியஸ் த சபையின் தலைவர் சி. வரதராஜா தெரிவித்துள்ளார்.

வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்று வரும் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகளே இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (5-4-299)

# போதைப்பொருள் தொடர்பான கலந்துரையாடல்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கிளிநொச்சி மக்கள் சிந்தனைக் களம் அமைப்பினருக்கும் பொலிஸாருக்குமிடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற இவ் விசேடகலந்துரையாடலில் கிளிநொச்சி பொலிஸாரின் விசேட மது ஒழிப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி மற்றும் மக்கள் சிந்தனைக்களத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத மதுபாவனை என்பவற்றை கட்டுப்படுத்துல் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக பொலிஸாருடன் இணைந்து மக்கள் சிந்தனைக்களம் இவற்றை கட்டுப்படுத்த எவ்வகையான நடவடிக்கைகளில் எதிர்காலத்தில் ஈடுபடுவது பற்றியும், முக்கியமாக மாணவர்கள், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுநடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் ஆராய்ந்தனர்.(5-4-350)

# பணிபுரிய பாதுகாப்பு தேவை அத்தியட்சகரிடம் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் சுதந்திரமாக பணிபுரிய பாதுகாப்பு தேவை என வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் கையொப்பம் இட்டு செட்டிகுளம் வைத்தியசாலை அத்தியட்சகருக்கு மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 10 ஆம் திகதி சில நபர்களால் வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மீது அச்சுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்ற அச்சுறுத்தல்கள் தொடராமல் சுதந்திரமாக எமது கடமையை செய்வதற்கு கடுமையான நிர்வாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்வதோடு இவ்வாறான தனிப்பட்ட சில நபர்களின் அச்சுறுத்தல் தொடருமாயின் எமது வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட நேரிடும் என்பதையும் தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றோம் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-250)

# தனியார் கல்வி நிறுவனங்கள் மீது பொலிஸார் அதிரடி நடவடிக்கை

(குருமன்காடு)

நாடு முழுவதும் கொவிட்-19 தாக்கம் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் தனியார் கல்வி நிலையங்களை மூடுமாறு அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் இவ் அறிவித்தலை மீறி வவுனியாவில் இயங்கிய தனியார் கல்வி நிறுவனங்கள் மீது பொலிஸார் அதிரடி நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்திரவிற்கமைய நேற்று முன்தினம் மாலை வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையங்களை பார்வையிட்ட பொலிஸார் அரச அதிபரின் உத்தரவை மீறி இயங்கிய மூன்று கல்வி நிலையங்களை மூடுமாறு பணித்ததுடன், அவர்களிடம் விளக்கம் கோரியதுடன், அனுமதி பெறாது திறக்கப்பட்டமை குறித்து எச்சரிக்கையும் விடுத்திருந்தனர்.(5-250)

# முடக்கப்பட்ட கிராமம் தொற்று நீக்கப்பட்டது




(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக இரண்டு கிராமங்கள் முடக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் குறித்த கிராமங்களில் முடக்கம் நீக்கப்பட்டது.

இந்நிலையில் மன்னாரின் பல பாகங்களிலும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணி முதல் கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், மன்னார் நகரசபையினர் இணைந்து கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் பெரியகடை பகுதியில் மூடப்பட்ட வர்த்தக நிலையம், அதனை சார்ந்த பகுதிகள், மன்னார் புதிய பேருந்து தரிப்பிடம் மற்றும் பட்டித்தோட்டம் ஆகிய பகுதிகளில் கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதன்போது மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ் உட்பட விசேட அதிரடிப் படை அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (5-4-285)

# றிசாத் கைது விவகாரம் நீதிமன்றம் நிராகரிப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனைக் கைது செய்வது தொடர்பான கோரிக்கையினை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மேலும் குறித்த விடயம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நீதிமன்றப் பிடியாணையொன்றைப் பெற்று அவரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில், தேர்தல் சட்டங்களை மீறி, வாக்காளர்களுக்கு போக்குவரத்து சேவைகளைப் பெற்றுக் கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்துகளை பயன்படுத்தி, வாக்காளர்களுக்கு போக்குவரத்து சேவைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளதாக றிசாத் பதியுதீனுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மடு வலயக் கல்வி பணிமனையில் நேற்று டெங்கு ஒழிப்பு சிரமதான பணிகள் மடு வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் தலைமையில் நடைபெற்றன.

(படம்: ஜோசப்நயன்)

## இராசிபலன்

14.10.2020
புரட்டாதி 28, புதன்கிழமை
துவாதசி முற்பகல் 8.38 மணிவரை
பூரம் மாலை 6.51 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம் அவிட்டம், சதயம்
பிரதோச விரதம் வளவன்


மேஷம்
சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.


ரிஷபம்
சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முன்னேற்றம் காண்பீர்கள்.


மிதுனம்
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


கடகம்
கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், தொலை தூர்த்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.


சிம்மம்
திடீர் பயணங்கள் ஏற்படலாம், மனக் குழப்பம் அகல நடவடிக்கை எடுப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி
குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, சுபகாரியச் செலவுகள் அதிகாரிக்கும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும்.


துலாம்
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.


விருச்சிகம்
உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


தனுசு
வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.


மகரம்
எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செல்வது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், திருடர் பயமுண்டு.


கும்பம்
குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


மீனம்
அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

தாய்மைக்கு மட்டுமே உண்மை கண்ணுக்குத் தெரியும்

# ஹொரண வைத்தியசாலையில் தாதி ஒருவருக்கே கொரோனா


## வைத்தியர்களுக்கு இல்லை என மறுக்கிறார் வைத்திய அதிகாரி

(கொழும்பு)

**ஹொரண வைத்தியசாலையில் அண்மையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான தாதி குறித்து தகவல்கள் வெளியாகி யுள்ள நிலையில், எவ்வாறாயினும் தனது வைத்திய சாலையில் இதுவரை குறித்த தாதி மாத்திரமே கொரோனா வைரஸ் தொற்றுக்குள் ளாகி உள்ளதாக ஹொரண ஆதார வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் அயந்தி ஜயவர்தன தெரிவித்தார்.**

இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்படும் போலி செய்திகளை மறுக்கும் முகமாக அவர் இதனைத் தெரிவித்தார்.

ஹொரண வைத்தியசாலையில் மேலும் 5 நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களில் 3 வைத்தியர்களும் அடங்குவதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறான சகல தகவல்களும் உண் மை



க்குப் புறம்பானவை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். ஹொரண வைத்தியசாலையில் தாதி ஒருவருக்கு மாத்திரமே தொற்று ஏற்பட்டுள்ளது. 41 பேர் முதல் தொற் றாளர்களாக அடையாளம் காணப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அதில் எவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட வில்லை.

ஆகவே தற்போதைய நிலையில் ஹொரண வைத்தியசாலையில் எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# சீனப் பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்தியுள்ளது

(கொழும்பு)

சீனப் பிரதிநிதிகளின் அண்மைய இலங்கை விஜயமானது இரு நாடுகளினதும் உறவுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனை மேலும் குறிப்பிட்டார்.

யாங் ஜியாச்சி தலைமையிலான உயர்மட்டக் குழுவினரின் இலங்கை விஜயமானது இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது என்றும் இந்த விஜயத்தின்



மூலம் விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்படுத்தப்படும் எனவும், புதிய வாய்ப்புக்கள் உருவாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஜ-4)

# அரசு '20' ஐ வாபஸ் பெற வேண்டும்



(கொழும்பு)

உத்தேச 20ஆம் திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மனோ கணேசன், இது தொடர்பில் தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அமரபுர, ராமன்ய பீடங்கள், 20ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய பொறிமுறைமை ஒன்றை உருவாக்கி அதனூடாக புதிய அரசியல் அமைப்பினை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதே சாலச் சிறந்தது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



(ஆ) வாக்கெண்ணலும் ஐம்பது வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டுக்களைத்தயாரித்தலும் (படம் 6 இல் D பகுதி).

மீள் தெரிவுக் குழுவிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற உரிய கட்சிக்கு அல்லது சுயேட்சைக்குழுவுக்கான வாக்குச் சீட்டுக்களை ஐம்பது சீட்டுக்கள் என்றவாறு எண்ணி ஒவ்வொரு கட்டுக்கும் இறப்பர் வார் ஒன்று இடப்படும்.

வாக்கெண்ணும் அலுவலில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்கள் வாக்கெண்ணும்போது கட்டொன்றில் அடங்கியிருப்பது ஒரே கட்சிக்கு அல்லது சுயேட்சைக்குழுவிற்கு கிடைத்த வாக்குச்சீட்டுக்களேயென சரிபார்த்துக் கொள்வார்கள். வாக்கெண்ணும் போது ஒரு வாக்குச்சீட்டு நிச்சயமற்றதெனக் காணப்படுமிடத்து அவ்வாக்குச்சீட்டை நிச்சயமற்ற வாக்குச் சீட்டுகளுக்கான பெட்டியில் இடுவர்.

50 இன் கட்டுகளாகக் கட்டப்பட்ட வாக்குச்சீட்டுகள் அந்தந்த அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவுக்கான உரிய பெட்டியில் இடப்படும். 50 கொண்ட கட்டுகளாகக் கட்டப்பட்டு இறப்பர் வார் ஒன்று இடப்பட்ட வாக்குச்சீட்டு கட்டுகள் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பரீட்சிக்கும் குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

(இ) வாக்குச் சீட்டுகள் 50 ஐக் கொண்ட கட்டினது பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல் (படம் 6 இன் பகுதி C இல்).

பரீட்சிக்கும் குழு தங்களிடம் கிடைக்கப் பெற்ற வாக்குச்சீட்டுகள் உண்மையாகவே குறித்த கட்சிக்கு / சுயேட்சைக் குழுவுக்கு இடப்பட்ட வாக்குகளுடனான வாக்குச்சீட்டுக்களா என்பதை மீள்பரிசீலனை செய்வதோடு கட்டில் அடங்கியுள்ள வாக்குச் சீட்டுக்களின் தொகை சரியானதாவென்பதையும் பரீட்சிக்கும். அத்தோடு வாக்குச்சீட்டில் அலுவலகக்குறியீடு இடப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சிக்கும்.

இப் பரீட்சிப்பின் போது வாக்குச் சீட்டுக்கட்டிலுள்ள இறப்பர் வார் நீக்கப்பட்டு பரீட்சிக்கப்படும். அப்போது எவ்விதத்திலேனும் வேறொரு கட்சிக்கு / சுயேட்சை குழுவுக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்று அல்லது நிச்சயமற்ற வாக்குச் சீட்டொன்று உள்ளடங்கியுள்ளதென தெரியவந்தால் அதை நீக்கிவிட்டு அதனை உரிய பெட்டியில் இடப்படுவதோடு அதற்குப் பதிலாக குறித்த கட்சிக்கு / சுயேட்சைக் குழுவுக்கு வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டொன்று அக்கட்டில் இடப்பட்டு, அக் கட்டு 50 சீட்டுகளைக் கொண்ட கட்டாக்கப்படும்.

50 ஐக் கொண்ட வாக்குச்சீட்டு கட்டொன்றை பரீட்சித்து முடிந்த பின்னர் அதற்கு இரண்டு இறப்பர் வார்கள் போடப்படும். இரண்டு இறப்பர் வார்கள் போடப்படுவதன் காரணம் 50 ஐக் கொண்ட கட்டினது பிழையற்ற தன்மையைப் பரிசீலிக்கப் பட்டுவிட்டது என்பதைக் காட்டுவதற்காகும். இதன்படி இவ்வாறு பரீட்சிக்கப்பட்ட எல்லா வாக்குச் சீட்டுக்கட்டுகளிலும் இரண்டு இறப்பர் வார்கள் போடப்பட்டிருக்கும்.

(ஈ) மீள் பரிசீலனை அல்லது அதியுயர் பரிசீலனை - (படம்-6ன் பகுதி B இல்)

வாக்குச் சீட்டுக்கள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் இரண்டு இறப்பர் வார்களுடன் கூடிய வாக்குச் சீட்டுக்கட்டுகளின் இறப்பர் வார்களை நீக்கிவிட்டு எண்ணி, எல்லா வகையிலும் சரியாக உள்ளதென நிச்சயப்படுத்திக் கொண்டதன் பின்னர் மீண்டும் மூன்று இறப்பர் வார்கள் போடப்பட்டு பெட்டியில் வைக்கப்படும். மூன்று இறப்பர் வார்கள் போடப்படுவதன் காரணம் அதியுயர் பரிசீலனை செய்யப்பட்டுவிட்டது என்பதைக் காட்டுவதற்காகும்.

மேற்குறித்த அனைத்து நடைமுறைகளையும் வாக்கெண்ணல் பணியாட் குழுவினர்களுக்குப் பின்னால் நின்றுகொண்டு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நெருங்கிய மேற்பார்வையொன்றை மேற்கொள்வார்கள்.

அது மட்டுமல்ல இவ் அனைத்து நடைமுறைகளையும் கட்சிகளின் வாக்கெண்ணல் முகவர்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு ஏதும் சந்தேகம் இருப்பின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அல்லது தலைமை வாக்கெண்ணும் அலுவலரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வார்கள்.

(உ) எழுமாற்றுப் பரிசீலனை - (படம் 6 இன் பகுதி A இல்).

மீள் பரிசீலனையின் பின்னர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மூன்று இறப்பர் வார்கள் இடப்பட்ட வாக்குச் சீட்டுக் கட்டுகளில் ஓரிரு வாக்குச் சீட்டுக் கட்டிலுள்ள வாக்குச் சீட்டுக்கள் எண்ணிக்கையை சரிபார்த்தல் மற்றும் உரிய கட்சிக்கு / சுயேட்சைக் குழுவுக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களா என எழுமாற்றுப் பரிசீலனை செய்யப்படும்.

(ஊ) இறுதிப் பரிசீலனை

எழுமாற்றுப் பரிசீலனைக்குப் பின்னர் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் தனக்குக் கிடைக்கப்பெறுகின்ற ஒரே கட்சியின்/ சுயேட்சைக் குழுவின். 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட 10 கட்டுகளை ஒன்றாக வைத்து 500 வாக்குச் சீட்டுகளைக் கொண்ட கட்டுகளை தயார் செய்து 4 ஆம் இறப்பர் 'வாரை இடுவார்.

இவ்வாறு வைத்து 500 வாக்குச்சீட்டுகளை கொண்ட கட்டுகளாகச்சேர்க்கப்படும்போது ஒரே கட்சிக்குரிய / சுயேட்சைக்குழுவுக்குரிய வாக்குச் சீட்டுகள் என நிச்சப்படுத்திக் கொள்ளப்படும். மேலும் இக்கட்டுகள் கவனமாகச் சரிபார்த்து உரிய கட்சிக்குரிய / சுயேட்சைக் குழுவுக்குரிய பெட்டியில் வைக்கப்படும்.

அதிக வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளதென தெரியவருகின்ற கட்சி / சுயேட்சைக் குழுவின் வாக்குச் சீட்டுகளை எண்ணியதன் பின்னர் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்கள் உரிதாகின்றனவெனப்புலப்படுகின்ற கட்சிகள் / சுயேட்சைக் குழுக்களின் வாக்குச் சீட்டுக்கள் முன்பு குறிப்பிட்டவாறு (அ) மீள் தெரிவு, (ஆ) வாக்கெண்ணல், (இ) பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல் (ஈ) அதியுயர் பரிசீலனை (உ) எழுமாற்றுப் பரிசீலனை மற்றும் (ஊ) இறுதிப் பரிசீலனை என பல்வேறு கட்டங்கள் ஊடாக எல்லாக் கட்சிகளுக்குரிய / சுயேட்சைக் குழுக்களுக்குரிய வாக்கெண்ணல் முடிவு செய்யப்படும். இவ்வாறு 2 ஆம் கட்ட வாக்கெண்ணல் முடிவுறும்.

**கேள்வி 19 :-** 2 ஆம் கட்ட வாக்கெண்ணல் முடிவுற்றதும் அடுத்து நடைபெறுவது என்ன?

**பதில்:-** ஒவ்வொரு கட்சியும் / சுயேட்சைக் குழுவும் பெற்றுக் கொண்ட வாக்குச் சீட்டுத் தொகைகள் "கட்சிகள் / சுயேட்சைக் குழுக்களுக்கிணங்க பெறுபேறுகளைக் கணக்கிடல் **(PE27)** "படிவத்தில் குறிக்கப்படும். அவ்வெழுத்து மூல வெளிப்படுத்துகையில் ஒவ்வொரு கட்சி அல்லது சுயேட்சைக் குழு சார்பாக சமுகமளித்துள்ள வாக்கெண்ணும் முகவர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர் ஆகியோரிடமிருந்து கையொப்பங்கள் பெறப்படும். வாக்கெண்ணும் முகவர்கள் தங்கள் கட்சிக்கு கிடைத்த வாக்குகளின் தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் கையெழுத்து இட்டு தங்கள் பெயரினைக் குறிப்பிடுவார்கள். இப் படிவம் 1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பாராளுமன்றத்தேர்தல்கள் சட்டத்தின் 53(7) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த **PE27** படிவத்தில் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தொடரொழுங்கு வாக்குச் சீட்டில் இடப்பட்டுள்ள தொடரொழுங்கிலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் / குறிப்பிடப்படும். இப்படிவம் காபன் தாளில் அச்சிடப்பட்டுள்ளது. அந்த **PE27** படிவத்தின் மூலப்பிரதி அதற்குரிய **H1** உறையில் இடப்பட்டு பொறியிடப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலருக்கு (பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையம்) அனுப்பி வைக்கப்படும்.

அப்பக்கெற்றுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமைகான பற்றுச்சீட்டொன்று பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையத்தினால் வழங்கப்படும். தெரிவத்தாட்சி அலுவலரினால் பெறுபேறுகள் சரியானவையென நிரூபிக்கப்பட்டதன் பின்னர் **PE27** பெறுபேற்று ஆவணத்தின் ஒரு பிரதி கட்சிச் செயலாளர் / அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் அல்லது அவ்வாறின்றேல் பெறுபேற்று ஆவணத்தில் கையொப்பமிட்ட கட்சியின் / சுயேட்சைக் குழுவின் ஒரு முகவருக்கு கையளிக்கப்படும். அதன் பின்னர் ஒரு பிரதி வாக்கு எண்ணிய மண்டபத்திற்கு வெளியே ஒட்டப்படும்.

காபன் தாளில் அச்சிடப்பட்ட **PE27** படிவத்தில் 6 பிரதிகள் உள்ளன. மூலப்பிரதி தெரிவத்தாட்சி அலுவலருக்கு (பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையம்) கொடுக்கப்படும்.

பொதுவாக 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பிரதிகள் கூடுதலான வாக்குகளைப் பெற்ற முதல் மூன்று கட்சிகளுக்கும் / அல்லது சுயேட்சைக் குழுக்களுக்கும் வழங்கப்படும். 5 ஆம் பிரதி வாக்கு எண்ணிய மண்டத்திற்கு வெளியே ஒட்டப்படும். 6 ஆம் பிரதி தலைமை வாக்கெண்ணும் அலுவலரின் குறிப்பேட்டுடன் **(journal)** இணைக்கப்படும். (தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## எலுமிச்சையும், நாரத்தை அல்லது துரிஞ்சியும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**எலுமிச்சை**

Botanical Name - Citrus aurantifolia
Family - Rutaceae
Engl - Lime
Sinh - Dehi

**நாரத்தை**

Botanical Name - Citrus aurantium
Family - Rutaceae
Sinh .- Embul dodam
Engl - Sour orange

எலுமிச்சையானது முட் கொண்ட புதர்ச் செடியாகும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். மொட்டு ஒட்டுமூலமும் இனப்பெருக்கம் செய்யலாம். 3 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும் எலுமிச்சை 25 ஆண்டுகள் வரை நல்ல பலனைத் தரும். எல்லாவகை மண்களிலும் பயிரிடலாம்.

100 கிராம் எலுமிச்சம் பழத்திலுள்ள சத்துக்கள் புரதம்-1.5கிராம், கொழும்பு-1.0 கிராம், நார்ப்பொருள்-1.3 கிராம், காபோவைதரேற்று 10.9 கிராம், கல்சியம்- 90 மில்லிகிராம், பொஸ்பரஸ் - 20 மில்லிகிராம், இரும்பு-0.3 மில்லிகிராம், விற்றமின் 'C' 63 மில்லிகிராம், கரோட்டின் -15 மை.கிராம்.

எலுமிச்சம்பழச் சாற்றில் தூய தேன் கலந்து குடித்து வந்தால் உடல் வலுப்பெறும். எலுமிச்சம்பழச்சாற்றை உப்பு கலந்து தினமும் காலையில் வெறும்வயிற்றில் குடித்து வந்தால் கண் பிரச்சினைகள், பித்த மயக்கம் நீங்கும்.

எலுமிச்சம் பழச்சாறு, வெள்ளரிப்பிஞ்சு, உப்பு மூன்றையும் கலந்து சாப்பிட்டுவர அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.

எலுமிச்சம்பழச்சாற்றை தேநீரில் கலந்து குடிக்க தலைவலி தணியும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் தனிய உப்பு மட்டும் கலந்து குடித்தால் வாந்தி உடனே நிற்கும்.

மாதவிலக்கு காலத்தில் ஏற்படும் வயிற்று வலிக்கு எலுமிச்சம்பழச்சாறு குடித்துவர வலி தணியும்.

எலுமிச்சம் பழச்சாறு, தேன் இரண்டையும் சம அளவு கலந்து குடித்து வந்தால் இருமல் குணமாகும்.

எலுமிச்சம்பழச்சாற்றை தினமும் குடித்துவர வாய் நாற்றம் மறையும்.

எலுமிச்சம் பழச்சாறு, சின்னச்சீரகம், பேரீச்சம்பழம் சேர்த்து அரைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர இரத்தக் கொதிப்பு குணமாகும்.

இளநீரில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து குடித்து வந்தால் தோல் வியாதிகள் குறையும்.

சுக்குக் கோப்பியில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடித்து வந்தால் ஜலதோஷம் நீங்கும்.

எலுமிச்சம் பழரசத்தையும், ஊறுகாயையும் 6 மாத காலம் உட்கொண்டுவர தேக





த்திற்கு பலத்தை கொடுக்கும்.

எலுமிச்சம் பழச்சாற்றில் சிட்ரிக்கமிலம் இருப்பதால் வெறும் சாற்றை சாப்பிடுவதை விட வெந்நீரிலோ, தேனிலோ, அல்லது வேறு ஏதேனும் பழச்சாற்றுடனோ கலந்து சாப்பிடுவதே நலம்.

எலுமிச்சம்பழச்சாற்றை குடித்து வந்தால் இரத்தக் குழாய்களில் உறைந்திருக்கும் கழிவுப் பொருட்களை அகற்றி இரத்தத்தை தூய்மைப்படுத்தும்.

விதைகள் முற்றாத எலுமிச்சம் பிஞ்சுகளை ஊறுகாய் போட்டு தினமும் உணவோடு உட்கொண்டு வந்தால் மலக்கட்டு நீங்கி பித்தம் தணிந்து இரத்த மூலம் தணியும்.

எலுமிச்சம்பழச்சாறு, வெங்காயச்சாறு இரண்டையும் ஒன்றாகக் கலந்து குடித்து வந்தால் பித்தம், தலைக்கிறுகிறுப்பு குணமாகும்.

எலுமிச்சம் இலைகளை குடிநீர் காய்ச்சி 30 மில்லி தொடக்கம் 60 மில்லி அளவு அடிக்கடி குடித்து வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

தேங்காய் எண்ணெயில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து காய்ச்சி தலையில் தேய்த்து குளித்து வந்தால் பொடுகுத் தொல்லை நீங்கும்.

எலுமிச்சம்பழச்சாற்றை ஈர உழுத்தம் மாவில் கலந்து சேற்றுப் புண்களில் தடவினால் அவை விரைவில் குணமாகும்.

எலுமிச்சம்பழச்சாறு, தக்காளிச்சாறு இரண்டையும் ஒன்றாகக் கலந்து முகத்தில் தடவி சிறுது நேரம் ஊறவைத்து கழுவினால் முகப்பொலிவு கூடும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் இலவங்கப் பொடியை கலந்து முகத்தில் பூசி வர கரும் புள்ளிகள் மறையும்.

எலுமிச்சம் பழச்சாற்றில் தேன் கலந்து உதடுகளில் பூசி வர உதடுகளில் ஏற்படும் வறட்சி வெடிப்பு ஆகியன நீங்கும்.

எலுமிச்சம்பழத் தோலைப் வெயிலில் உலர்த்தி பொடித்து பல்தேய்த்து வந்தால் பற்கள் பளிச்சென இருக்கும்.

எலுமிச்சம் பழரசத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை சமனெடை சேர்த்து சிறிதளவு சீனி சேர்த்து ஒரு மண்பானையில் போட்டு மேல்மூடி இறுக்கிக் கட்டடி பூமியில் 40 நாட்கள் புதைத்து வைத்து பின் எடுத்து வடித்து வைத்துக் கொண்டு அன்றாடம் ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வர ஜீரண மண்டலம் பலமாகி அஜீரணக் கோளாறுகள் நீங்குவதுடன், கை, கால் விறைப்புகளும் நீங்கி இரத்த ஓட்டமும் சீராகும்.

எலுமிச்சம் பழத்தை மருத்துவமன்னன் என்று சித்தமருத்துவத்தில் குறிப்பிடப்படுகிறது. இது ஒரு உணவுக் கூறு (பானம்) சீக மட்டுமில்லாமல் மூலிகையாகவும், பலதாது. ஜீவப் பொருட்களை நச்சு நீங்கவும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

ஒரு மண்சட்டியில் தேவையானளவு சின்னச் சீரகத்தை எடுத்து அதில் போட்டு மூழ்க எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு தினமும் வெயிலில் வைத்து சாறு முழுவதும் சுவறியதும் சீரகத்தை உலர்த்தி பொடித் அரித்து வைத்துக் கொள்ளவும் தினமும் காலை, மாலை 2 கிராம் அளவு இளஞ் சூட்டு நீரில் எடுக்க அதியுயர் குருதி அமுக்கம் குறையும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் தேன் கலந்து தினமும் முகத்தில் பூசிவர முகத்திலுள்ள தோல் சுருக்கம் நீங்கும்.

இளநீரில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து உடலில் தேய்த்து வந்தால் தேமல், வியர்க்குரு போன்றவை நீங்கும்.

உலர்ந்த எலுமிச்சம் பழத் தோலை சிகைக்காய், உலர்ந்த செவ்வரத்தம் பூக்கள், வெந்தயம், பச்சைப்பயறு ஆகியவற்றுடன் கலந்து அரைத்து தலையில் நன்கு தேய்த்து குளித்துவர பொடுகு நீங்குவதுடன் தலைமயிர் நன்கு வளருவதற்கும், கருமையாவதற்கும் உதவும்.

ஆனால் எலுமிச்சை பயன்படுத்தும் அளவு கூட அதே குடும்பத்தைச் சேர்ந்த நாரத்தை/துரிஞ்சி பயன்படுத்தப்படுவதில்லை. ஆனாலும் நாரத்தை நிறைந்த மருத்துவப் பண்புகளை கொண்டது. அது எமது பிரதேசத்திலும் வீட்டுத்தோட்டங்களிலும் பெரும்பாலும் எல்லாவகை மண்களிலும் வளரக் கூடியது.

100 கிராம் நாரத்தம்பழத்திலுள்ள சத்துக்கள்.

புரதம்-1 கிராம், கொழுப்பு -0.1 கிராம், காபோவைதரேற்று-10 கிராம், கல்சியம்-30 மில்லி கிராம், பொஸ்பரஸ்-30 மில்லிகிராம், இரும்பு 0.2 மில்லிகிராம், தயமின்-120 மை.கிராம், நியாசின்-0.3 மில்லிகிராம், ஈரலிப்பு -88.5 கிராம்.

நாரத்தம் பழத்தை சாப்பிட்டுவர மலம் இளகும். இரத்த ஓட்டம் சீர்பட உதவும். பற்களுக்கு உறுதி தரக்கூடியது. உடலிற்கு குளிர்ச்சியைத் தரக் கூடியது. உடல் உறுதி பெறும்.

நாரத்தம் பழச்சாறு தாகத்தை தனிக்கக் கூடியது.

நாரத்தம் பழச்சாறு 250 மில்லிக்கு 150 கிராம் சீனி சேர்த்து அடுப்பேற்றி பாகுபதம் வரும்வரை காய்ச்சி பெறப்படும் நாரத்தம் மணப்பாகு / துரிஞ்சி மணப்பாகு ஆனது வாந்தி, குமட்டலை நீக்குவதுடன், உணவை எளிதில் ஜீரணமடையத் தூண்டும்.

கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஏற்படும் வாந்திக்கு துரிஞ்சி மணப்பாகு 1-2 தேக்கரண்டி அளவு பருகக் கொடுக்கலாம்.

நாரத்தம் காய்களில் ஊறுகா்ய் போட்டு சாதத்துடன் சேர்த்து சாப்பிட்டு வர அல்லது ஊறுகாய்த் தண்ணீராக தயாரித்து பருகி வந்தாலும் வாந்தி, குமட்டல் ஆகியவை நீங்குவதுடன் ஜீரணமண்டலத்தையும் பலப்படுத்தக் கூடியது.

நல்ல தூக்கம் வருவதற்கு நாரத்தம் பழச்சாற்றில் 120 மில்லி எடுத்து 2 தேக்கரண்டி தேன்விட்டு கலக்கி தூங்குவதற்கு ஒரு மணிநேரம் இருக்கும்போது சாப்பிட்டு விட வேண்டும். தூக்கம் இலகுவில் வரும்.

நாரத்தம் காயை வேக வைத்து, உப்பு போட்டு ஊற வைத்து தினமும் ஒரு துண்டு சாப்பிடு வந்தால் நன்றாகப் பசி எடுக்கும்.

நாரத்தம் பிஞ்சை வேக வைத்து அரைத்துச் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.

நாரத்தம் பழச்சாறு 1 லீற்றர், தேன் 1 லீற்றர் இரண்டையும் சேர்த்து காய்ச்சி சர்பத் தயாரித்து தினமும் 30 மில்லி அளவுக்கு குடித்து வந்தால் இரைப்பை சார்ந்த நோய்கள் குணமாகலாம்.

நாரத்தம் பழச்சாற்றை வாரம் இருமுறை குடித்து வந்தால்உடற்சூடு குறையும்.

நாரத்தம் இலை, எலுமிச்சம் இலை இரண்டையும் சம அளவு எடுத்து உலர்த்தி உப்பு சேர்த்து பொடித்து தினமும் பல்துலக்கி வர பல் அழுக்கு நீங்கும்.

நாரத்தம் மரப் பூவின் இதழ்களை வெயிலில் காய வைத்து பொடிசெய்து, 2 தேக்கரண்டி தேனில் கலந்து காலையில் சாப்பிட்டுவர அஜீரணம் குணமாகும்.

# பாரதம்

## இந்தியாவில் உச்சம் பெற்ற தொற்று குறைவடைந்தது



(டில்லி)

இந்தியாவில் கடந்த 2 மாதங்களில் இல்லாத அளவிற்கு கொரோனாத் தொற்றின் தாக்கம் வெகுவாக குறைந்துள்ளது.

இதன்படி கடந்த ஓகஸ்ட் மாதத்தை தொடர்ந்து பாதிப்பு உச்சம் பெற்று வந்த நிலையில், 63 நாட்களுக்கு பிறகு கொரோனாத் தொற்றின் தாக்கம் குறைந்துள்ளது.

அந்தவகையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 54 ஆயிரத்து 265 பேர் புதிய தொற்றாளர்களாக கண்டறியப்பட்டுள்ள நிலையில் 710 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 71 இலட்சத்து 73 ஆயிரத்தை கடந்துள்ளதுடன், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 9 ஆயிரத்தை கடந்துள்ளது.

மேலும் 62 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளதுடன், 8 இலட்சத்து 32 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். (நி)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 500 கிலோ மஞ்சள் பறிமுதல்



(சென்னை)


இலங்கைக்கு கடத்த இருந்த 500 கிலோ சமையல் மஞ்சள் இந்திய கடலோர காவல்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் மண்டபம் அருகே உள்ள முயல் தீவில் இருந்து இலங்கைக்கு கள்ளத் தோணியில் கடத்த இருந்த 500 கிலோ சமையல் மஞ்சள் மூட்டைகளை இந்திய கடலோரக் காவல் படையினர் பறிமுதல் செய்தனர்.

மேலும் இது தொடர்பான கடத்தல்காரர்களை தேடி வருகின்றனர். (நி)

## அதிகமானோருக்கு கெ

## இயல்பான நோயெதிர்ப்



## எந்தவித அ


## உலக நாடுகளை எ






கெ
தடுப்பா
நோய்
அத்துட
தெரிவி

## ஒன்லைன் வியாபாரத்தி
## புலியாக மாறிய பூனை



(ஹார்வே)

பூனைக்குட்டியை வளர்க்க ஆசைப்பட்டு பிரான்ஸ் நாட்டு தம்பதியர் புலிக்குட்டியை வாங்கிய சம்பவம் ஒன்று ஒன்லைன் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் லே ஹார்வே
சேர்ந்த தம்பதியர் சவன்னா பூ
வளர்க்க ஆசைப்பட்டுள்ளனர்.

ஒன்லைன் விளம்பரம் ஒன்
மாக பூனை என்று நினைத்து
ஒன்றை பல இலட்சம் கொடுத்து வா
னர். ஆனால், சில நாட்களில்
ஏற்பட்ட உருவ மாற்றத்தை அடு
ளுக்கு சந்தேகம் வந்ததால் பொல
தகவல் அளித்தனர்.

இதையடுத்து, அவர்கள் வள
தது. இந்தோனேஷியாவின் சுமத்ர
புலி என்று தெரிய வந்தது.

## கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை அறிமுகப்படுத்தியது வடகொரியா

### சமாளிக்க தடுப்பு நடவடிக்கையில் ஜப்பான் உறுதி

(டோக்கியோ)

வடகொரியாவில் இருந்து வரும் அச்சுறுத்தலை சமாளிக்க தங்களின் ஏவுகணை தடுப்பு திறன் வலுப்படுத்தப்படும் என ஜப்பான் உறுதி பூண்டுள்ளது.

வடகொரியாவை ஆட்சி செய்து வரும் தொழிலாளர் கட்சியின் 75 ஆவது ஆண்டு விழா கடந்த சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

இதையொட்டி தலைநகர் பியாங்யாங்கில் பிரமாண்டமான முறையில் இராணுவ அணிவகுப்பு நடந்தது.

இந்த அணிவகுப்பில் இதுவரை இல்லாத வகையில் மிகவும் பெரிய மற்றும் அதிக சக்தி வாய்ந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வடகொரியா அறிமுகப்படுத்தியது.

வழக்கமாக தனது ஆயுத பலம் மற்றும் ஏவுகணைகள் ஆகியவற்றை வெளிக்காட்டும் வகையிலேயே இத்தகைய இராணுவ அணிவகுப்புகளை வடகொரியா நடத்தும்.

இதனிடையே ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் வடகொரியாவின் இராணுவ அணிவகுப்பு குறித்து கவலை தெரிவித்துள்ளன.

அதேசமயம் வடகொரியாவில் இருந்து வரும் அச்சுறுத்தலை சமாளிக்க தங்களின் ஏவுகணை தடுப்பு திறன் வலுப்படுத்தப்படும் என ஜப்பான் உறுதிபூண்டுள்ளது. (நி)

## மியன்மார் மீதா
## தீவிரப்படுத்
### சர்வதேச மன்

(ஜெனிவா)

கிளர்ச்சியாளர்களுடனான மோதலில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக மியன்மார் இராணுவத்துக்கு எதிராக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், மியன்மாருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் இடம்பெற்று வரும் விசாரணையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடு

# வெளிநாடு

# ...து கொரோனா பரவுவதன் மூலம் ...ர்ப்பு சக்தி உருவாகும் என்பதற்கு ...த ஆதாரமும் இல்லை

## ...ா எச்சரிக்கிறார் அதனாம்

(ஜெனீவா)

**கொரோனா வைரஸிற்கு எதிரான இயல்பான ...டுப்பாற்றலை உருவாக்குவதாகக் கூறிக்கொண்டு தொற்று ...நாய் பரவலைக் கட்டுப்படுத்தாமல் இருப்பது அறமாகாது. ...த்துடன் அது அர்த்தமற்றவாதம் என உலக சுகாதார அமைப்பு ...தரிவித்துள்ளது.**

அதிகமானோருக்கு கொரோனா தொற்று நோய் பரவுவதன் மூலம் இயல்பான தடுப்பாற்றல் உருவாகிவிடும் என்று தப்புக்கணக்குப் போட வேண்டாம் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதனாம் கேப்ரியேசஸ் உலக நாடுகளை எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பெரும்பாலான மக்களிடம் பரவினால் அது இயல்பான தடுப்பாற்றலை உருவாக்கும் என சில ஆராய்ச்சியாளர்கள் வாதிடுகின்றனர். இவ்வாறு கூறிக்கொண்டு சமூக முடக்கல்களை அமுலாக்காமல் இயல்பாக இருப்பதன் மூலம் பொருளாதார அழிவுகளிலிருந்து மீளலாம் என்று சிலர் நம்புகின்றனர்.

பெருந்தொற்று நோய் ஒன்று ஏற்பட்டு பெரும் கேடு ஏற்படும் போது அதனை அனைவருக்கும் பரவவிட்டு பொதுவான நோயெதிர்ப்பு சக்தி உருவாகும் எனக் காத்திருக்கும் வரலாறு உலக வரலாற்றில் ஒருபோதும் இருந்ததில்லை எனவும் கேப்ரியேசஸ் சுட்டிக்காட்டினார்.

அதிகமானவர்களுக்கு கொரோனா தொற்று பரவுதன் மூலம் இயல்பான நோயெதிர்ப்பு சக்தி உருவாகும் என்பதற்கு இதுவரை எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. அப்படியிருக்கும்போது தொற்று நோயை அதிகமானோருக்கு பரவ விட்டு அதனைக் கட்டுப்படுத்த நினைப்பது சாத்தியமற்றது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் குறித்த ஒரு சிறியளவான விஞ்ஞான ரீதியான விளக்கங்களே எங்களிடம் உள்ளன. அது குறித்த முழுமையான விளக்கம் யாரிடமும் இல்லை. கொரோனா தொற்றில் இருந்து மீண்டவர்கள் கூட மீண்டும் தொற்றுக்குள்ளாகி வருவதை நாங்கள் காண்கின்றோம் .

பெரும்பாலானோருக்கு தொற்று ஏற்பட்ட பின்னர் தடுப்பாற்றல் மேம்பட்டிருக்கலாம். ஆனால் அந்தத் தடுப்பாற்றல் எத் தனை காலத்துக்கு நீடிக்கும் என்பது தெரியவில்லை. ஏனெனில் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமான நோய் எதிர்ப்புச் சக்தி இருக்கிறது. அத்துடன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக வினையாற்றுகிறது.

கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பாற்றல் உலகில் 10 வீதத்துக்கும் குறைவான மக்களிடத்தில்தான் உள்ளது. உலகின் பெரும்பால்ான மக்கள் இன்னமும் கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்படும் நிலையில்தான் உள்ளனர். சமீபமாக ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் தினசரி கொரோனா தொற்று விகிதம் அதிகரித்து வருகிறது என அவர் மேலும் எச்சரித்தார். (நி)


## ...த்தில் ...ூனை

...லே ஹாரர்வே நகரைச் ...ன்னா பூனைக்குட்டி ...ளனர்.

...பரம் ஒன்றின் மூல ...னைத்து புலிக்குட்டி ...காடுத்து வாங்கியுள்ள ...நாட்களில் குட்டியில் ...ந்தை அடுத்து அவர்க ...தால் பொலிஸாருக்கு

...ர்கள் வளர்த்து வந் ...வின் சுமத்ரான் வகை ...தது. (நி)

## தடுப்பூசி பரிசோதனையை நிறுத்தியது அமெரிக்க நிறுவனம்




(வோஷிங்டன்)

கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்ட நபருக்கு பக்க விளைவு ஏற்பட்டதால், ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் பரிசோதனையை நிறுத்தியுள்ளது.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்க ஒவ்வொரு நாடுகளும் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. அமெரிக்காவின் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனமும் ஒரு தடுப்பூசியை தயாரித்துள்ளது.

இந்த தடுப்பூசியை மனித உடலில் செலுத்தி முதல் மற்றும் 2ஆம் கட்ட பரிசோதனைகளை முடித்த ஜான்சன் அண்ட் ஜான்சன் 3ஆம் கட்ட பரிசோதனையை கடந்த மாதம் இறுதியில் தொடங்கியது. தடுப்பூசி போட்டுக்கொண்ட ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாத நிலை ஏற்பட்டது.

இதனால் தடுப்பூசி பிரிசோதனையை தற்காலிகமாக ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுத்தி வைத்துள்ளது. (நி)

## மீண்டும் சீனாவில் பரவும் கொரோனா

(பீஜிங்)

சீனாவில் கிங்டாவோ நகரில் 9 பேர் கொரோனாவுக்கு இலக்காகியுள்ள நிலையில், அங்குள்ள 9 மில்லியன் மக்களுக்கும் பரிசோதனை நடத்த சுகாதாரத் துறை முடிவு செய்துள்ளது. சீனாவில் இரண்டு மாத இடைவெளிக்கு பின்னர் மீண்டும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. இதனால், துரித நடவடிக்கைகளுக்கு மாகாண நிர்வாகங்கள் உத்தரவு பிறப்பித்துள்ளன.

கொரோனா பரவலை முற்றாக ஒழித்ததாக கூறும் சீனா, இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளது. கடந்த இரு மாதங்களாக நாட்டில் தொற்று பரவல் இல்லை என அறிவிக்கப்பட்டதுடன், வணிக நிறுவனங்களுக்கான தடைகள் முற்றிலும் நீக்கப்பட்டன. இருப்பினும் அறிகுறிகளற்ற கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையை இதுவரை சீனா வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# ...மீதான சர்வதேச விசாரணை ...டுத்தப்பட வேண்டும்

## ...ன்னிப்புச்சபை வலியுறுத்து



...கள் பாதுகாப்புச் சபையிடம் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மன்னிப்புச் சபையின் பிரசாரங்களுக்கான துணை பிராந்திய இயக்குநர் மிங் யூ ஹா நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "சர்வதேச மன்னிப்புச் சபைக் குழுவால் பெறப்பட்ட முதல் சாட்சியம், புகைப்படங்கள் மற்றும் காணொளி சான்றுகள் மியன்மார் இராணுவ சண்டையின் மையப்பகுதியில் உள்ள பகுதிகளில் பொதுமக்கள் துன்பப்படுவதை இராணுவம் முற்றும் புறக்கணிப்பதை காட்டுகின்றன.

அரகன் (Arakan) கிளர்ச்சியாளர்களுக்கும் மியன்மார் இராணுவத்திற்கும் இடையிலான மோதலில் பொதுமக்கள் தொடர்ந்து துன்பத்தை அனுபவிக்கிறார்கள். மேலும், இந்த மனித உரிமை மீறல்கள் நாளுக்கு நாள் மிகவும் அதிர்ச்சியூட்டும் மற்றும் வெட்கக்கேடானவையாக உள்ளன" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மியன்மார் இராணுவத்திற்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் இடம் பெற்று வரும் விசாரணையை துரிதப்படுத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்" என சர்வதேச மன்னிப்புச் சபையின் மிங் யூ ஹா வலியுறுத்தியுள்ளார். (நி)

# வர்த்தக நடவடிக்கைகளை மீட்டெடுக்க இலகு கடன் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

**கொவிட் -19 நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான கடன் திட்டத்தின் கீழ் 17ஆயிரத்து 500 கோடி ரூபாய்களை மத்திய வங்கி ஒதுக்கியுள்ளதுடன், வீழ்ச்சி கண்டுள்ள வர்த்தக, வியாபார நடவடிக்கைகளை மீட்டெடுக்க இந்த இலகு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.**

நாட்டில் கொவிட்-19 வைரஸ் பரவல் ஏற்பட்டதன் பின்னர் கடந்த ஆறு மாத காலமாக நடுத்தர தொழிலாளர், விவசாயிகள் என பலர் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் நாட்டின் பொருளாதாரத்திலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி தெரிவிப்பதுடன், இந்த நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீளும் விதமாக "கொவிட் -19 வைரஸ் நெருக்கடியில் இருந்து மீண்டு சௌபாக்கியமான நாட்டினைக் கட்டியெழுப்பும்" கடன் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் கோடி ரூபாய்களை மத்திய வங்கி ஒதுக்கியிருந்த போதிலும் தற்போது பிரதமரின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தொகையை மேலும் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய்களினால் அதிகரிக்க மத்திய வங்கி தீர்மானம் எடுத்துள்ளது.

அதற்கமைய 17,500 கோடி ரூபாய்களை இலகு கடன் திட்டத்திற்காக மத்திய வங்கி ஒதுக்கியுள்ளது. (நி-7)

# நிறுவன ஊழியர்களின் தகவல்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு கோரிக்கை



(கொழும்பு)

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சேவையாற்றும் அனைத்து ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களைப் புதுப்பித்து கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குறித்த தகவல்களை எதிர்வரும் 3 தினங்களுக்குள் திரட்டுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போதைய நிலைமையின் அடிப்படையில் தேவை ஏற்படின் புலனாய்வுப் பிரிவிற்கு தகவல்களை வழங்குவதற்கு நிறுவன பிரதானிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-7)

# ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதியானது

(கொழும்பு)

நீர்கொழும்பு நகரில் மேலும் மூவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து நகரில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு பழைய சிலாபம் வீதியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து அந்த வைத்தியசாலை மூடப்பட்டது.



அதனை தொடர்ந்து அவரது குடும்ப அங்கத்தவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கொவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அந்த குடும்பத்தைச் சேர்ந்த மேலும் மூவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை உறுதியாகியுள்ளது.

பாதிக்கப்பட்டவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் இருவருமே தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் நீர் கொழும்பு நகரில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. பல்லன்சேனை, கட்டுவபிட்டிய, முன்னக்கரை, பிட்டிபனை, சாந்தஜோசப் வீதி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களாவர். (நி-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அழுவது நல்லது

ஒருவருக்கு அழவேண்டும் போல இருக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே தனியாக ஒரு இடத்தில் உட்கார்ந்து அழ ஆரம்பிக்கலாம்

அவருக்கே... சிரிக்க வேண்டும் போல இருக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள் உடனே தனியாக உட்கார்ந்து சிரிக்க ஆரம்பிக்கக்கூடாது

பார்க்கிறவர்கள் சந்தேகப்படுவார்கள்...

நல்லாத்தானே இருந்தான்... இன்றைக்கு இப்படி உட்கார்ந்து சிரிக்கிறானே... என்று யோசிப்பார்கள்!

ஆனால் எப்படி இருந்தாலும்...

வாய்விட்டுச் சிரிக்கிறது எப்படி உடம்புக்கு நல்லதோ அது மாதிரியே வாய்விட்டு அழுவதுவும் உடம்புக்கு நல்லதுதானாம்

உளவியல் வல்லுநர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள் பொதுவாக நாம் என்ன நினைக்கின்றோம்...

அழுவது கோழைத்தனத்தின் அடையாளம் என்று நினைக்கின்றோம். அது மட்டுமில்லை...ஆண்கள் அழுதா அது அவர்களுக்கு கேவலம் என்று வேறு நினைக்கின்றோம்.

காலங்காலமாகப் பரப்பப்பட்டு வரும் ஒரு தவறான நம்பிக்கை இது என்று உளவியல் வுல்லுநர்கள் சொல்கிறார்கள்.

வயிற்றுக்குத் தேவையில்லாத பொருள் வாந்தியாக வெளியில் வந்துடும். அதுமாதிரி...

மனசுக்குத் தேவையில்லாத ஒன்று அழுகையாக வெளியில் வருகிறது. அவ்வளவுதான்!

மனசுக்குள் அடக்க முடியாத அதிர்ச்சிகள் சேரும் போது அது அழுகையாக வந்து விடுகிறது. அது மகிழ்ச்சியான அதிர்ச்சியாக இருந்தாலும் சரி! அடக்க முடியாத அதிர்ச்சிகளை வெளியே கொட்டி விடுகிற முயற்சி தான் அழுகை

வாய்விட்டு அழுது... உணர்ச்சிகள் வெளியே சென்றால்... மனச்சுமை குறைந்துவிடும்

ஆண், பெண் எல்லோருக்குமே இது பொருந்தும். உண்மையிலேயே உணர்ச்சிகளை அடக்கி வைக்க முயற்சி செய்தால் அதனால் பல தீய விளைவுகள் உண்டாகக்கூடிய வாய்ப்பு உண்டு. அதனால்...

வாய்விட்டு சிரிப்பது மாதிரி வாய்விட்டு அழவேண்டும்! அதுதான் நல்லது

ஆனால் அப்படி அழுதால் பார்க்கிறதுக்கு நல்லா இருக்காது. அதனால் தனியாக உட்கார்ந்து அழுது விட்டு பின்பு கண்ணைத் துடைத்துக் கொண்டு வந்து விடலாம்.

நிபுணர்கள் இப்படிச் சொல்லி விட்டார்கள் என்பதற்காக எதுக்கெடுத்தாலும் முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு அழுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது.

எப்பமுதாவது அதிர்ச்சியான செய்தி கிடைக்கும் போது அழுது அந்த மன அழுத்த நிலையிலேயிருந்து தப்பிக்கலாம். அதோட விட்டுவிட வேண்டும். அதுதான் நல்லது

இருந்தாலும் அழுகையில் எத்தனையோ ரகம் உண்டு.

ஓர் இளைஞன் அழுது கொண்டிருந்தான்.

"ஏனடா அழுகிறாய்?" என்று கேட்டார் ஒருவர்.

"எங்க தாத்தா இறந்துவிட்டார்..." என்றான்.

"உங்க தாத்தாவுக்கு என்ன வயசு?" என்றார்.

"95" என்றான்.

"அதுதான்... முழுசாக வாழ்ந்துவிட்டு தானே போயிருக்கிறார். இதற்குப் போய் அழுது கொண்டு இருக்கிறாயே" என்றார் இவர்.

"நான் அவர் இறந்து போனதுக்காக அழவில்லை சேர்... வேலை மாற்றத்திற்கான நேர்முகத் தேர்வு அட்டை இன்றைக்கு அவருக்கு வந்திருக்கு...

அதைக் கண்ணாலே பார்க்க அவருக்குக் கொடுத்து வைக்கவில்லையே... அதை நினைத்து அழுகிறேன்!" என்றான்.

## சாரதிகளால் பயணிகளின் விபரம் அறியப்பட வேண்டியது அவசியம்

(கொழும்பு)

வாடகை வாகனங்களை செலுத்தும் சாரதிகள், தங்களது வாகனங்களில் பயணிக்கும் நபர்கள் தொடர்பில் விபரங்களை அறிந்து கொள்வதற்காக முறையொன்றை கையாள வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களுடன் தொடர்பு கொண்டுள்ள நபர்களை கண்டறிவதற்காக பொலிஸ் புலனாய்வு பிரிவினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரும் பல முயற்சிகளை எடுத்துள்ளனர். அதற்கமைய பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த தொற்றாளர்கள் வாடகை வாகனங்களை பயன்படுத்தியிருந்தால், இதன்போது அவர்களுடன் இன்னும் நபர்கள் சென்றுள்ளார்களா? என்பது தொடர்பில் தகவல்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதனால், இவ்வாறான வாடகை வாகனங்களை செலுத்தும் சாரதிகள் தங்களது வாகனங்களில் பயணிக்கும் நபர்கள் தொடர்பில் தகவலை அறிந்துகொள்வதற்காக முறையொன்றை கையாள வேண்டும். இதன்போது சம்பந்தப்பட்ட நபர்கள் தொடர்பில் தகவல்களை அறிந்துகொள்வதற்கு இலகுவாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

## ரவி கருணாநாயக்கவிற்கு அழைப்பாணை





(கொழும்பு)

இலஞ்ச ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பெர்பெச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் பணிப்பாளரான அர்ஜுன் அலோசியஸ் ஆகியவர்களை நவம்பர் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை வெளியிட்டுள்ளது.

இலஞ்ச ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையை ஆராய்ந்த பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகேவினால் இந்த அழைப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி மற்றும் அதே ஆண்டின் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டின் நிதி அமைச்சராக செயற்பட்டு, வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான அர்ஜுன் அலோசியஸ் பணிப்பாளராக செயற்படும் வொல்ட் மற்றும் ரோ அசோசியெட் தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான மொனார்க் வீட்டுத் திட்டத்தின் இலக்கம் 5 PH2 வீட்டில் வசித்து வந்தமை குறித்து இலஞ்ச சட்டத்தின் 19 ஆவது சரத்தின் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக குற்றப் பத்திரிகையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## உளவுத்துறையின் தவறான தகவல்களால் 5 பாதுகாப்புச் செயலாளர்களை நியமித்தேன்

### மைத்திரி சாட்சியம்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர்களால் உளவுத்துறை ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டன.

இதன் காரணமாகவே தமது ஆட்சிக்காலத்தில் ஐந்து பாதுகாப்புச் செயலாளர்களை நியமிக்க தாம் எடுத்த முடிவுக்கான காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாட்சியம் அளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னால் இரண்டாவது நாளாக சாட்சியமளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஒவ்வொரு வாரமும் அதிகாரிகளுக்கு உளவுத்துறை ஒத்துழைப்புக்கூட்டம் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

எனினும் இந்த ஆணைக் குழுவில் சாட்சியமளித்த முன்னாள் பாதுகாப்பு செயலாளர்களும் அரசியல் தலைவர்களும் உளவுத்துறை ஒத்துழைப்பு கூட்டங்கள் நடத்தப்படவில்லை என்று நிரூபித்தனர்.

இந்தப் பொய்யான சர்ச்சியத்தை பார்க்கும்போது தமது பதவிக்காலத்தில் தாம் ஏன் ஐந்து பாதுகாப்பு செயலாளர்களை நீக்கிவிட்டு புதியவர்களை நியமித்தேன் என்பது தெளிவாகிறது.

இதன்போது ஆணைக்குழுவினால் முன்னாள் ஜனாதிபதியிடம் ஆவணம் ஒன்று காட்டப்பட்டது. அதில் உளவுத்துறை வாராந்தக்கூட்டம் 2016 மே மாதம் முதல் ஒகஸ்ட் 2017 வரையில் மாத்திரமே நடத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை பல அரச சாரா நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகள் குற்றவியல் புலனாய்வுத்துறை விசாரணைகளில் நேரடியாக தலையிட்டனர்.

இது முன்னாள் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் சுயாதீன விசாரணைகளை நடத்துவதில் தடையாக இருந்தது என்று குறிப்பிட்டார்.

முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆணைக்குழு முன் அளித்த அறிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் (ஏஜி) துறையின் பிரதிநிதி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது முன்னாள் ஜனாதிபதி மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டார்.

முன்னதாக, ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த ரத்நாயக்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விசாரணை அதிகாரிகள் மீது விசாரணை நடத்தும் போது, குறிப்பாக இராணுவ அதிகாரிகள் தொடர்பான அழுத்தங்களை வாங்கியதாக கூறினார்.

சுயாதீன விசாரணைகளை நிறுத்த தாம் ஒருபோதும் கேட்கவில்லை.ஆனால் இந்த விசாரணைகளை மேற் கொள்ளும்போது பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகள் அவற்றில் தலையீடு செய்தமையை தாம் கண்டித்ததாக குறிப்பிட்டார்.

தற்போதைய அரச புலனாய்வு சேவை பணிப்பாளர் பிரிகேடியர் சுரேஷ் சாலே மீது ஏற்பட்ட சில அரசியல் அழுத்தங்கள் காரணமாக, அவரை மலேசியாவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததாக மைத்திரிபால குறிப்பிட்டார்.

குற்றப்புலனாய்வுத்துறையினர், சாலேயை அரசியல் ரீதியாக கைது செய்ய முயன்றது.

இதன்போது முன்னாள் இராணுவத் தளபதியின் உதவியுடன் அவரை மலேசியாவுக்கு அனுப்ப நான் நடவடிக்கை எடுத்ததாக சாட்சியான மைத்திரிபால குறிப்பிட்டார்.

முப்படைகளின் பிரதானிகளும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் இலஞ்ச ஊழல் வழக்கு தொடர்பில் தமக்கு தெரியாமல் நீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டதாகவும் இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க தமக்கு தெரிவிக்காமல் தேவையற்ற முடிவுகளை எடுத்துள்ளதாகவும் அவர் ஆணைக்குழுவில் காலையில் பணிபுரிந்து வந்தார், மாலை நேரங்களில் அலரி மாளிகையில் அரசியல் செய்தார் என்றும் மைத்திரிபால குற்றம் சுமத்தினார். (நி-7)

## கொரோனா அச்சம்

## ஒரு வாரத்தில் விற்பனை செய்யும் பொருட்கள் ஒருநாளில் விற்பனை செய்யப்பட்டது

### இதுவே தட்டுப்பாட்டிற்கு காரணம்

(கொழும்பு)

கொரோனா தொற்று குறித்த அச்சம் காரணமாக மக்கள் உணவுப் பொருட்களை வாங்கி சேமித்து வைக்க முற்பட்டுள்ள நிலையில் சந்தையில் உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுகள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஜி.எஸ். நாதன் தெரிவித்துள்ளார்.

ஒரு வாரத்தில் விற்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் கடந்த வாரம் ஒரு நாளில் விற்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர் வரும் நாட்களில் நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பும் எனவும், அரிசி தவிர அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை இருக்காது .எனவே மக்கள் இது குறித்து அச்சப்படத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் முதல் மினுவாங்கொடை கொத்தணியூடாக பெருமளவானோர்களுக்கு கொரோனா தொற்றியது கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் நாடளாவிய முடக்கம் ஏற்படலாம் என மக்கள் மத்தியில் தகவல் பரவியுள்ளது.

இதனால் மக்கள் பொருட்களை வாங்குவதில் முண்டியடித்து வருகின்றமையை அவதானிக்கலாம். (நி-7)

## 6 ஆவது இடத்தை தனதாக்கியது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்




(கொழும்பு)

உலகின் சிறந்த 10 விமான நிறுவனங்களில் ஒன்றாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட Code Nast எனப்படும் பயண சஞ்சிகையின் 2020 ஆம் ஆண்டுக்கான வாசகர்களின் தேர்வுகளுக்கு அமைவாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த பட்டியலில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 6 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன், அவுஸ்திரேலிய கொன்டாஸ் விமான சேவை நிறுவனம் 5 ஆவது இடத்தையும், நியூசிலாந்தின் விமான சேவை 4 ஆவது இடத்தையும், கட்டார் விமான சேவை 3ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

மேலும், எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனம் இரண்டாவது இடத்தையும், அதே போன்று சிங்கப்பூர் விமான சேவை நிறுவனம் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. (நி-7)

# கடல் புறா

## காட்டுப் புறாவும் வீட்டுப் புறாவும்




அதற்கு மேல் பேசுவதற்கு ஏதுமில்லாததால், "சரி இளைய பல்லவரே இரவும் ஏறிக்கொண்டிருக்கிறது. நீங்கள் படுக்கச் செல்லுங்கள். காஞ்சனா! இவருக்கு எந்த அறையைக் கொடுக்கலாம்?" என்று வினவினான்.

"எந்த அறைக்குள் ஏறிக் குதித்தாரோ அந்த அறையையே கொடுக்கலாம்!" என்றாள் காஞ்சனாதேவி.

"சரி அப்படியே செய், பணிப்பெண்களை விட்டு வேண்டிய வசதிகளைச் செய்து கொடு" என்று குணவர்மன் கூறியதும் தன்னுடன் வரும்படி இளைய பல்லவனுக்குச் சைகை செய்த காஞ்சனாதேவி அறையை விட்டு வெளியேறத் திரும்பினாள். கருணாகர பல்லவன் தூதுப் புறாவை மீண்டும் கையில் பிடித்துக் கொண்டு அவளைத் தொடர்ந்தான்.

மீண்டும் அந்தப் பழைய மாடிய றையை அடைந்ததும், "உள்ளே செல்லுங்கள்" என்று கூறிய காஞ்சனாதேவி வாயிற்படிக்கு வெளியிலேயே நின்றாள்.

"ஏன்? நீங்கள்?" என்று மெள்ள இழுத்தான் இளைய பல்லவன்.

"ஊஹூம் நீங்கள் மட்டும் போங்கள்."

"நான் வேண்டுமானால்..."

"என்ன சொல்கிறீர்கள்?"

"திரைக்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறேன..."

அதைக் கேட்ட காஞ்சனாதேவி கலகலவென நகைத்தாள். "இளைய பல்லவருக்கு ஏற்கனவே இத்தகைய பழக்கம் பலம் போலிருக்கிறது." என்றும் சொன்னாள் சிரிப்புக்கிடையே.

இளையபல்லவன் கையிலிருந்த பறவைத் தீவின் காட்டுப் புறா, இருமுறை சிறகடித்தது. கடாரத்தின் வீட்டுப் புறா ஒருமுறை நெளிந்தது. இரண்டு புறாக்களையும் மாறி மாறிப் பார்த்த கருணாகர பல்லவனின் மனம் புத்தம் புதிய கனவுலகத்தில் பறந்துகொண்டிருந்தது. அவன் கண்கள் மிகுந்த தைரியத்துடன் எதிரே இருந்த வீட்டுப் புறாவின் மீது நிலைக்கவும் செய்தன.

### அபாய அறிவிப்பு!

அந்த இரவில், அறை ஜாமத்திற்கு முன்பு, எந்த முன்னறிவிப்புமின்றிச் சாளரத்தின் மூலம் திடீரென வந்து குதித்துத் திரை மறைவில் பதுங்கிய இளையபல்லவன், சில நாழிகைக்குள்ளாகவே தன்னுடன் நீண்ட நாள் பழக்க முள்ளவன் போல் நடந்து கொள்ளத் துவங்கிவிட்டதையும் படுக்கச் செல்லும் அந்த நேரத்திலும் இடக்கு வார்த்தைகள் பேச முற்பட்டதையும் கண்ட காஞ்சனாதேவிக்கு, அவன் மீது எல்லையற்ற கோபம் சுடர் விடுவதே இயற்கையென்றாலும் அந்த இயற்கைக்கு இதயம் இடம் கொடாமல், உள்ளம் பூராவும் மகிழ்ச்சி வெள்ளம் பாயவே, அவள் அறை நாதாங்கியைப் பிடித்த வண்ணம் இடை சிறிது நெளிய மிக ஒய்யாரமாக நின்றாள்.

தவிர, இளைய பல்லவன், அவன் கையிலிருந்த காட்டுப் புறாவையும் நோக்கித் தன்னையும் நோக்குவதைக் கண்டதும் சிறிது புன்முறுவலும் கோட்டினாள் கடாரத்தின் இளவரசி, இளைய பல்லவன் அவள் நின்ற அழகையும், உள்ளே ஓடிய எண்ணங்களின் விளைவாக அவள் உதடுகளில் தோன்றிய புன்னகையையும் கவனித்ததன்றி, அவள் கழுத்தில் வளைய வந்த மார்பில் தொங்கிய நவரத்தின மாலையையும் பார்த்து அவள் புன்னகையில் ஒளிக்கு முன்பு அந்த நவரத்தின மாலையின் ஒளி எத்தனை சர்வ சாதாரணமானது என்பதை நினைத்து வியந்தான், எத்தனையே பளபளப்பான கற்களை உலகத்தில் ஆண்டவன் சிருஷ்டித்திருந்தும் அவற்றுக்குப் பின்பு தொக்கி நிற்க உணர்ச்சியாகிற ஒளியை மட்டும் சிருஷ்டிக்காத காரணத்தினாலேயே ஒரு பெண்ணின் இளநகை முன்பு இரத் தின வைடூரியங்களும் ஒளியிழந்து விடுகின்றன என்பதை எண்ணி ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். காஞ் சனா தேவியின் கண்களும் உதடு களும், உணர்ச்சிகளின் விளை வாகப் பேசும் பேச்சுக்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் நவரத்தின மாலையின் வைடூரியங்கள் எத்தனை மௌனத்தையும் சங்கடத்தையும் அடைந்திருக்கின்றன என்பதையும் இளைய பல்லவன் அலசிப் பார்த்து 'விளக்கில் இவை பளிச்சுப் பளிச்சென்று மின்னுவதற்கும் அந்தச் சங்கடம் தான் காரணமாயிருக்க வேண்டும்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

செயற்கைக் கற்கள் சிறிதளவும் ஈடு கொடுக்க முடியாத இயற்கை லாவண்யங் களுடன் திகழ்ந்த காஞ்சனாதேவி க்கு ஆபரணங்கள் அநாவசியம் என்றே முடிவுக்கு வந்த கருணாகர பல்லவன், சொர்ணச் சாயையுடனும் பட்டுப்போல் மென்மையுடனும் விள ங்கிய அவள் கழுத்தையும், கன்னங்களையும் ஒருமுறை தடவிப் பார்த்துத் தன் இடது கையிலிருந்த வெண்புறாவின் முதுமை மெல்லத் தடவிக் கொடுத்தான்.

அவன் கண்கள் பாய்ந்த இடங்களைக் கவனித்த காஞ்சனாதேவி அவன் புறாவின் முதுகைத் தடவியதும் தன் கபோலங்களையே அவன் வருடிவிட்டது போல் பெரிதும் சங்கடத்திற்குள்ளாகி தலையை சரேலென்று மறுபுறம் திருப்பிக் கொண்டாள். அப்படித் திருப்பியதால் தன் பார்வைக்கு நேரெதிரில் வந்து விட்ட அவள் வலது கன்னத்தில் வெட்கத்தின் குருதி பாய்ந்து அதைச் செக்கச் செவேலென்று அடித்துவிட்டதைக் கண்ட இளைய பல்லவனும் தான் வரம்பு மீறிவிட்டதை உணர்ந்து, பேச்சினால் உணர்ச்சிகளுக்குத் தளைபோட முற்பட்டு, "காஞ்சனாதேவி!" என்று ஒருமுறை அழைத்தான்.

அவளிடமிருந்து ஒரு "ஹூம்" காரந்தான் பதிலாக வந்தது.

"நான்..." சிறிது தடுமாறியே பேசினான் அந்த வீரன்.

"ஹூம்" அப்பொழுதும் அதே சத்தம்தான் வந்தது அவளிடமிருந்து. அந்தச் சத்தத்தில் சங்கடத்துடன் ஓரளவு கடுமையும் கலந்திருந்தது.

"விளையாட்டாகப் பேசிவிட்டேன்" என்று மறுபடியும் பேச்சைத் துவங்கி, முடிக்க முடியாமல் திணறினான் இளைய பல்லவன்.

"ஹூம்!"

"மன்னிப்புக் கேட்கிறேன்."

"ஹூம்! ஹூம்."

"இந்த ஹூம்முக்கு மேல் வார்த்தைகளே வராதா உங்களுக்கு?" இம்முறை இளைய பல்லவன் சொற்களில் சிறிது தைரியமும் தொனித்தது.

சரேலெனத் திரும்பிய காஞ்சனாதேவியின் கண்களில் மிகுந்த கம்பீரமும் மிதமிஞ்சிய கடுமையும் கலந்திருந்தன. உரிமையற்ற ஆடவன் அதிக உரிமை கொண்டாட முயலும்போது கற்புக்கரசிகளின் இதயத்தில் ஏற்படும் உக்கிரம் அந்தக் கண்களில் இருந்தது. "வார்த்தைகள் வரும் இளைய பல்லவரே! நிரம்ப வரும்., வரம்புக்குள் சம்பாஷணையும் செய்கையும் இருக்கும் பட்சத்தில்" என்ற அவள் சொற்களிலும் அந்தக் கடுமை நன்றாகப் புலனாயிற்று. இப்படிப் பேசிய அந்த அழகி, அதுவரையிருந்த சங்கடத்தையும் சலனத்தையும் உதறிக்கொண்டு நெளிந்த நிலையிலேயே சிறிது நிமிர்ந்து கம்பீரத்துடன் நின்றாள்.

ஆளும் தோரணையில் நின்ற அந்த ஆரணங்கைக் கவனித்த இளைய பல்லவனின் விழிகள், அவள் விழிகளிலிருந்து தப்பவே முயன்றன, பத்து வாள்கள் வீசப் பட்டாலும் அவற்றை உறுதியுடன் நோக்கவல்ல அவன் கண்கள் அந்தப் பெண்ணின் பார்வைக்கு முன்னால் உறுதி குலைந்து நிலை தடுமாறின. அவன் பேசிய சொற் களும் அப்படி உறுதி குலைந்து தமுதமுத்தே வெளிவந்தன. "புரி கிறது அரசகுமாரி! தவறு புரிகிறது!" என்ற சொற்களைத் தட்டுத் தடு மாறியே உதிர்த்தான் இளையபல்லவன்.

சில விநாடிகள் முன்பு தன்னை அலசிய கண்கள் நிலைகுலைந்து, பெண்களின் கண்களைப்போல் நிலத்தை நோக்குவதைக் கண்டாள் கடாரத்துக் கட்டழகி, புறாவைப் பிடித்திருந்த இடது கையும் அதன் முதுகைத் தடவிய வலது கையும் சற்றே நடுங்குவதையும் பார்த்த அந்தப் பேரழகியின் முகத்திலிருந்த கோபம் மெள்ள மெள்ள அகன்றது.

(தொடரும்...)

# கொரோனா பரவலைத் தடுப்பதில் ஊடகங்களுக்கு கூடுதலான பொறுப்பு உண்டு - கெஹலிய



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, குறித்த வைரஸ் பரவலைத் தடுப்பதில் ஊடகங்களுக்கு கூடுதலான பொறுப்பு உண்டு என அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் ஊடக நிறுவனங்கள் ஆற்றும் பணிகளை பாராட்டினார்.

மக்களின் தனியுரிமையைப் பாதுகாப்பது தொடர்பாக செய்தி அறிக்கையிடல் பற்றிய பொது வேலைத்திட்டத்தை தயாரிப்பது அவசியமாகும்.

ஊடகங்கள் அறிந்தோ அறியாமலோ மக்களின் தனியுரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

தனி மனித உரிமை, நோய் என்பன பற்றி அறிக்கையிடும் போது வரையறையுடன் செயற்படுவது அவசியமாகும்.

இதுபற்றிய வழிகாட்டல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க கருத்து தெரிவிக்கையில் , கொரோனா வைரஸ் தொடர்பான அறிக்கையிடல் ஊடகவியலாளர்களுக்கு சவால்மிக்கதாகும் என்றும் தெரிவித்தார்.

வைரஸ் பரவலை தடுப்பதற்காக பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கும் பொறுப்பு ஊடக நிறுவனங்களுக்கு இருப்பதாக கலந்துரையாடலில் கலந்து கொண்ட வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஜகத் விஜயவீர தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## வேலை பெற்றுத் தருவதாக மோசடி; வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை

(கொழும்பு)

போலந்து நாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடி நடைபெறுவதாக இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரித்துள்ளது.

பல மோசடிகள் தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் போலந்து வேலை வாய்ப்புப் பற்றி பெரியளவிலான விளம்பரங்கள் விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் அவை உண்மைத்தன்மையற்ற சட்ட விரோதமானதாகும் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் வேலைவாய்ப்பு தேடுவோர் தொழில் ஒப்பந்தம் மற்றும் விசா என்பவற்றை வெளிநாட்டுத் தூதுவராலயத்தில் நேரடியாகச் சென்று பெற்றுக் கொண்ட பின்னரே வேலை வாய்ப்பு முகவருக்கு கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. (ஐ-10)

## சுதந்திர தினத்திற்கு ஏற்பாட்டுக்குழு நியமனம்

(கொழும்பு)

அடுத்த வருடம் பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வுகள், ஏற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இதற்கமைய, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில், 7 பேரைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், தினேஸ் குணவர்த்தன, ஜனக பண்டார தென்னக்கோன், கெஹலிய ரம்புக்வெல, சமல் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

## பேருவளைப் பகுதியில் சுனாமி என வதந்தி



(பேருவளை)

பேருவளைப் பகுதியில், சுனாமி ஏற்படப் போவதாக போலியான வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

பேருவளை கடற் பிராந்தியத்திற்குட்ட பகுதிகளில் சுனாமி ஏற்படப் போவதாக சமூக வலைத்தளங்களில் வெளியான செய்திகளில் உண்மையில்லை என மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள்


(கொழும்பு)

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பரீட்சைத் திணைக்களத்தி னால் நடத்தப்படவிருந்த சில நிறுவனங்களுக்கான தேர்வுகள் காலவரையறையின்றி ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஆசிரியர் சேவைகளுக்கான தரம் 3 அதிகாரிகளுக்கான செயற்றிறன் தேர்வு, கிராம அதிகாரி சேவையின் தரம் 3 அதிகாரிகளுக்கான எழுத்துத் தேர்வு மற்றும் செயற்றிறனுக்கான விரைவான தேர்வு ஆகியவை இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளன.

மேலும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கான தேர்வு மற்றும் இலங்கை சுங்கத் துறையின் சுங்கக் கட்டுப்பாட்டாளர்களுக்கான தேர்வு உள்ளிட்ட பல தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## மேலும் 7 ஊழியர்களுக்கு தொற்று உறுதி



(கொழும்பு)

கொள்ளுபிட்டிய பிராண்டிக்ஸ் நிறுவன ஊழியர்கள் 7 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் மினுவாங்கொட பிராண்டிக்ஸ் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப் படுகின்றது.

இவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர். (நி-7)

## 11 பேர் குணமடைந்து வீடுகளுக்கு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 11 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, இதுவரை 3,328 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## ஆசிரியைக்கு கொரோனா மாணவர்களுக்கு பரிசோதனை

(சீதுவ)

சீதுவ, ஆண்டியம்பலம் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் இரண்டாம் வருட மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியை ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த பாட சாலையின் மாணவர்கள் பி.சி. ஆர்.பரிசோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். (நி-7)

# மக்களின் நன்மைக்காக எத்தனை பேரையும் தனிமைப்படுத்தத் தயார்

(கொழும்பு)

நாட்டில் 2ஆயிரம் பேரைத் தனிமைப்படுத்தக்கூடிய மையங்களை அமைத்து வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஊடக விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மையங்கள் போதுமானதாக இல்லை எனவும், தற்போது சுமார் 10 ஆயிரத்து 500 பேர் வரையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழலில் 2 ஆயிரம் பேரைத் தனிமைப்படுத்தக்கூடிய மையம் அமைக்கப்பட்டு வருகின்றது. நாட்டில் தற்போதைய நிலையில் 96 வயதிற்குட்பட்ட 10 ஆயிரத்து 500 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். நாம் இதுவரை 51 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர் களை தனிமைப்படுத்தி சமூ கத்துடன் இணைத்துள்ளோம். எனவே, முடியாதது என்று எது வும் இல்லை. நாட்டு மக்களின் நன்மைக்காக எத்தனை பேரை வேண்டுமானாலும் இராணுவம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தத் தயார்.

அனைத்து அதிகாரிகளும் சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வந்த போதிலும் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)



# ரியாஜ் பதியுதீன் விடுதலை நியாயமற்றது



## சட்டமா அதிபர் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாக்குதல்தாரிகளுக்கு உதவி புரிந்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலான சந்தேகத்தின் பேரில், குற்றப்புலனாய்வு பிரிவினரால் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி, ரியாஜ் பதியுதீன் கைது செய்யப்பட்டதோடு, 5 மாதங்களின் பின்னர் கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அவர் மீது வழக்குத் தொடர்வதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை என, தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன, அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் தற்போது ரியாஜ் பதியுதீன் குற்றப்புலனாய்வு பிரிவினரால் விடுவிக்கப்பட்டமையானது நியாயமற்றது என சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா சுட்டிக்காட்டியுள்ளார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வரவழைக்கப்பட்ட குற்றப் புலனாய்வு பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்க, குற்றப்புலனாய்வு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸ், பிரதான விசாரணை அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சுதத் குமார ஆகியோர் சட்டமா அதிபரை சந்தித்தபோதே ரியாஜ் பதியுதீனின் விசாரணை கோவையை பரிசீலித்த சட்டமா அதிபர், அது பூரணமற்றது என தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 17 மற்றும் ஜூலை 13 ஆகிய திகதிகளில் சிஐடியின் பொறுப்பு வாய்ந்த டி.ஐ.ஜியிடமிருந்து இரண்டு சந்தர்ப்பங்களில் ரியாஜ் பதியுதீனை விசாரிக்க வேண்டாமென தடுப்பு உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன என்பது தெரிய வந்துள்ளது.

ஒக்டோபர் 13 ஆம் திகதி காலாவதியாகவிருந்த ரியாஜ் பதியுதீன் கைது தொடர்பான விசாரணையை முடிக்குமாறு குற்றப்புலனாய்வு செப்டெம்பர் 6 ஆம் திகதி டிஐஜி நுவான் வெதசிங்கிற்கு உத்தரவிட்டது. நுவான் வெதசிங்கின் பரிந்துரையின் பேரில் செப்டெம்பர் 30 ஆம் திகதி ரியாஜ் பதியுதீன் விடுவிக்கப்பட்டார் என்பது தெரிய வந்துள்ளது.

அதன்படி, விசாரணையை நிறுத்தி, ரியாஜ் பதியுதீனை விடுவிப்பதற்கான குற்றப்புலனாய்வின் முடிவை நியாயப்படுத்த முடியாது என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்

அத்தோடு, கடந்த சனிக்கிழமை அன்று பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனின் சகோதரர், ரியாஜ் பதியுதீன் விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 100 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதமொன்று, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக, பிரதமரின் ஊடகப்பிரிவு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் நேற்று திங்கட்கிழமை றிசாத் பதியுதீனின் ச்கோதரர் ரியாஜ் பதியுதீன், தன்னை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இன, பேதம் மற்றும் அரசியல் இலாபம் கருதி ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை தம்மீது சுமத்துவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க 3 மாத கால அவகாசம்

## போக்குவரத்து ஆணையாளர்

(கொழும்பு)

செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் பட்சத்தில், புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நிவாரண காலமொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் விரைவில் அறிவிக்கவுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் சுமித் சந்தன குறிப்பிட்டுள்ளார்.

செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான புதிய அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை பரீட்சைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக சில மாவட்டங்களில் குறித்த செயன்முறை பரீட்சைகளுக்கு தடைகள் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் சுமித் சந்தன தெரிவித்தார்.

இதனால் அந்தந்த மாவட்டங்களில் நிலவும் நிலைமைகளை கருத்திற் கொண்டு, தகுந்த நடைமுறைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட ஆணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2142

### தயாளன்





### திவான்




### லக்சிகா




### கவிஷ்ணயி




### றேணு




### சந்துரு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தடைப்பட்ட போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது



(தலவாக்கலை)

தலவாக்கலை - டயகம பிரதான வீதியில் லிந்துலை - அகரகந்தை பகுதியில் மரம் வீழ்ந்ததால் தடைப்பட்டிருந்த போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

குறித்த பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததால், அவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டது.

இதனையடுத்து அப்பிரதேசவாசிகள் மற்றும் லிந்துலை பொலிஸார் ஆகியோர் இணைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தினை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

இதனையடுத்து குறித்த பகுதியில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

குறித்த மரம் முறிந்து வீழ்ந்ததால் சுமார் மூன்று மணித்தியாலத்திற்கு மேலாக போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இதனால் டயகம, அக்கரப்பத்தனை, மெராயா ஆகிய பகுதிகளுக்குச் சென்ற பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அத்தோடு தொலைபேசி இணைப்புகள் மீது மரம் முறிந்து வீழ்ந்ததால், அப்பகுதிக்கான தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-7)



# ஆன்மீகம்

## இயங்கிக்கொண்டே இருப்பதே இனிய வாழ்க்கை!

(நேற்றைய தொடர்ச்சி)

பூலோகம் எப்படி இருக்கிறது என்று பார்த்து வர மகாவிஷ்ணு வையத்திற்கு வந்தார். அவரோடு நாரதரும் உடன் வந்தார். வயல் வெளிகள் வெறிச் சோடிக் கிடந்தன. ஆள் அரவமே இல்லாமல் ஒரே அமைதி. ஆனால், என்ன ஆச்சரியம். ஒரே ஒரு உழவன் மட்டும் சற்றும் கவலைப்படாமல் மாடு பூட்டி உழுது கொண்டிருந்தான். விஷ்ணுவிற்கு ஒரே வியப்பு. 'நாரதா, நீ போய், ஏன் உழுகிறான் என்று கேட்டு விட்டு வா' என்றார். வந்த நாரதரிடம் அந்த உழவன் சொன்னான்: 'மூன்று வருடங்கள் மழை பெய்யாது என்று எனக்குத் தெரியும்.

ஆனால், மூன்று வருடங்கள் நான் உழாமல் உறங்கிக் கொண்டிருந்தால் உழுவது எப்படி என்பதே எனக்கு மறந்து போய்விடும்'. உழவனின் வார்த்தையைக் கேட்டு பெருமாள் மூன்று வருடங்கள் சங்கெடுத்து ஊதாமல் இருந்தால் ஊதுவது எப்படி என்பதையே மறந்து போய் விடுவோமே என்று எண்ணி சங்கெடுத்து ஊதினார். கொட்டோ கொட்டென்று கொட்டியது மழை. கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த மற்றவர்கள் பதறியடித்துக் கொண்டு படுக்கையில் இருந்து எழுந்தனர். மயக்கமும், உறக்கமும் தவிர்த்து தொடர் இயக்கத்தில் எல்லோரும் இணைந்தனர். 'விசையுறு பந்தினைப் போல் - உள்ளம் வேண்டியபடி செல்லும் உடல் கேட்டேன்,' என்று பாடுகிறார் மகாகவி பாரதியார்.

உடம்பு முதுமையை எட்டிவிட்டாலும் உள்ளம் இளமையை விட்டு விடாமல் கடைசிவரை பற்றிக் கொள்ள வேண்டும். புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் சாமர்செட் மாம் கூறுகின்றார்: 'கேட்டோ என்ற பேரறிஞர் தன்னுடைய எண்பதாவது வயதில் கிரேக்க மொழியைப் பயின்றார் என்பதை அறிந்து நான் சிறுவயதில் ஆச்சரியம் அடைந்தேன். ஆனால், வயதான பிறகு இப்போது எண்ணுகின்றேன். இளமையில் கடினமானவை என்று நான் ஒதுக்கித் தள்ளியவை எல்லாம் வயோதிகத்தில் முழு நம்பிக்கையுடன் என்னால் முடிக்க முடிகிறது!' விழி மூடும் வரை விழிப்புணர்வும், ஈடுபாடும், வினை ஆற்றும் திறனும் நம்மிடமிருந்து விலகிச் செல்வதற்கு நாம் அனுமதித்து விடக்கூடாது.

புகழ்பெற்ற அமெரிக்க கோடீஸ்வரர் ராக்ஃபெல்லர் விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்து இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கேட்டார். ''இவ்வளவு வயதிற்குப் பிறகும் நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டிய அவசியம் என்ன? எண்ணற்ற நிறுவனங்கள் உங்களுக்கு உள்ளன. ஓய்வெடுத்துக் கொள்ளலாமே? அதற்கு ராக்ஃபெல்லர் 'இப்போது இந்த விமானம் உயரத்தை எட்டி விட்டது. இதன் இஞ்சினை விமானி இப்போது அணைத்து விட்டால் என்ன ஆகும்?' என்று இளைஞரைப் பார்த்துக் கேட்டார்.

'விபத்து நிகழும். விமானம் விழுந்து விடுமே' என்றார் இளைஞர். 'வாழ்வில் உயர்ந்து விட்டோமே என்று முயற்சியை நிறுத்தி விட்டால் நம் தொழிலில் கண்டிப்பாக தொய்வு ஏற்படும். மேலும் தொடர்ந்து உழைப்பது வருமானத்திற்காக மட்டுமே அல்ல மன நிறைவிற்கும், மகிழ்ச்சிக்கும் கூட,' என்றார் ராக்ஃபெல்லர். சிகரத்தை எட்டும் முயற்சியில் நாம் வெற்றிபெற்று விட்டால் 'சிகரமே நம் சிம்மாசனம்' என்று உட்கார்ந்து நாம் ஓய்வெடுத்துக் கொண்டு விடக்கூடாது. சிகரத்தையும் மீறி வான் வெளியில் வலம் வர வேண்டும்.

**'சிங்க நடைபோட்டு சிகரத்தில் ஏறு**
**சிகரத்தை அடைந்தால் வானத்தில் ஏறு'**

**என்று ஊக்குவிக்கிறார் கவிஞர் வைரமுத்து.**

# செய்தித்துளிகள்

## பொலிஸ் காவலில் இருந்த சந்தேக நபர் உயிரிழப்பு

(கொழும்பு)

கைதான நிலையில் பூகொட பொலிஸாரின் கண்காணிப்பிலிருந்து 21 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக குறித்த இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பூகொட பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவருக்கு திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-7)

## அனைத்து அதிவேக வீதிகளும் ஓரமைப்பின் கீழ்

(கொழும்பு)

அனைத்து அதிவேக வீதிகளையும் திறைசேரியின் கீழ் கொண்டுவர "அதிவேக வீதிகள் முதலீடு நிறுவனம்" என்ற அமைப்பை நிறுவுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (நி-7)

## பாகிஸ்தானிலிருந்து இனி பாஸ்மதி அரிசி

(கொழும்பு)

பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தானிலிருந்து வருடாந்தம் 6000 மெற்றிக் தொன் பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 | 200 |
| தக்காளி | 160 | 180 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 100 | 170 | 180 | 200 |
| பூசணி | 60 | 60 | 70 | 80 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 60 | 70 | 100 |
| சின்னவெங்காயம் | 130 | 200 | 200-260 | 240 |
| பெரியவெங்காயம் | 200 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 200 | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50-60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 90-100 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 280 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 220 | 80 |
| போஞ்சி | 200 | 250 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 50 | 20 | 50-60 | 40 |
| தேசிக்காய் | 150 | 150 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 75 | 60-80 |
| இராசவள்ளி | -- | 200 | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 50 | 60 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | -- | -- |




# உடைவாள்!

முல்லா ஒரு தடவை அயல் நாட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் எவ்வளவு தொலைதூரமாக இருந்தாலும் கழுதையின் மீது சவாரி செய்துதான் செல்ல வேண்டும்.

முல்லா நீண்ட தொலைவு பயணம் புறப்படப் போகும் செய்தியை அறிந்த அண்டை வீட்டுக்காரர் திருடர் பயம் காட்டில் அதிகம் இருக்கும் என்று மிகவும் கவலைப்பட்டார்.

ஆதலால் முல்லாவுக்கு வழியில் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று அண்டை வீட்டுக்காரர் உடைவாள் ஒன்றை அன்போடு கொடுத்து அனுப்பினார். முல்லாவும் அதை மரியாதையுடன் வாங்கி இடுப்பில் கட்டிக்கொண்டு பிரயாணத்தை தொடங்கலானார்.

ஒரு காட்டு வழியாக முல்லா கழுதைமீது அமர்ந்து சென்று கொண்டிருந்த போது அவரை நான்கு திருடர்கள் வழிமறித்துக் கொண்டனர். கிழவனாரே, உம்மிடம் உள்ள விலையுயர்ந்த பொருளைக் கொடுத்துவிடும். உம்மை உயிரோடு அனுப்பி விடுகிறோம் என்று திருடர்கள் கேட்டனர்.

என்னிடம் காசு, பணமெல்லாம் ஏதும் கிடையாதே. நான் ஒரு பரம ஏழை என்றார் முல்லா. அப்படியானால் உம்முடைய கழுதையை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு நடந்து செல்லும் என்றனர்.

“கழுதை இல்லாமல் இந்த வயதான காலத்திலே என்னால் நடந்து செல்ல இயலாது என்று நினைத்த முல்லா ஒரு யோசனை செய்தார். “என்னிடம் ஒரு உடைவாள் இருக்கிறது கழுதைக்குப் பதிலாக அதைப் பெற்றுக் கொண்டு என்னை விட்டு விடுகிறீர்களா?” என்று கேட்டார் முல்லா.

அந்த உடைவாள் விலைமதிப்புள்ள அருமையான வாள். அதனை வாங்கிப் பார்த்த கள்வர்கள் தங்களுடைய தொழிலுக்குப் பயன்படும் என்று உடைவாளைப் பெற்றுக்கொண்டு முல்லாவை கழுதையுடன் தொடர்ந்து போக அனுமதித்தனர். பிரயாணத்தை முடித்துக்கொண்டு முல்லா ஊர் திரும்பினார்.

வீட்டுக்கு வந்த முல்லாவை அண்டை வீட்டுக்காரர் மகிழ்ச்சியுடன் வரவேற்று “பிரயாணம் எவ்வாறு இருந்தது” என விசாரித்தார். “எதிர்பார்த்ததை விட நன்றாக இருந்தது” என்றார் முல்லா. “வழியில் கள்வர் தொல்லை ஏதாவது ஏற்பட்டதா?” என அண்டை வீட்டுக்காரர் கேட்டார்.



“அதை ஏன் கேட்கிறீர்கள். நான்கு திருடர்கள் வந்து என்னை வளைத்துக் கொண்டார்கள். நல்ல வேளையாக நீங்கள் கொடுத்த உடைவாள் இருந்தது. அதை உபயோகித்து நிலைமையைச் சமாளித்து விட்டேன்” என்றார் முல்லா.


இனி உமக்கு உடைவாள் தேவைப்படாது. கொடுத்து விடுங்கள் என்றார் அண்டை வீட்டுக்காரர். அதைத்தான் அவர்களிடம் கொடுத்துவிட்டேனே என்றார் முல்லா.

காட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சியை முல்லா விரிவாக எடுத்துச் சொன்னார். அண்டை வீட்டுக்காரருக்கு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

**நீதி: ஒருவனுக்குத் தேவையானதைக் கொடுத்துவிட்டால் அவன் நம்மை ஒன்றும் செய்ய மாட்டான். அதேசமயம் பலம் மிக்கவரிடம் பலம் இல்லாதவன் மோதி ஜெயிக்க முடியாது. ஆனால் பலம் இல்லாதவன் தன் அறிவால் ஜெயிக்க முடியும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்



காவிரிப் பூம்பட்டினம்

**இலக்கியம்**

தமிழக வரலாற்றைத் தெரிந்து கொள்வதில் கல்வெட்டுகளுக்கு இணையாக உதவுபவை, இலக்கிய நூல்கள். ராஜராஜன் காலம் பற்றிச் சொல்லும் நூல்கள் மிகக் குறைவானவையே.

அவற்றில் கருவூர்த் தேவர் பாடியருளிய தஞ்சை பெரிய கோயில் பற்றிய திருவிசைப்பா முதன்மையானதாகும்.

நம்பியாண்டார் நம்பிகள் எழுதிய சிற்றிலக்கியங்கள் பத்து, பதினோராம் திருமுறையில் உள்ளன.

அவற்றின் மூலம் ராஜராஜன் காலத்துச் சமுதாய வாழ்க்கை பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

ராஜராஜேஸ்வர நாடகம், ராஜராஜ விஜயம் என்கின்ற இரு நூல்கள் ராஜராஜன் கால்த்தில் இயற்றப்பட்டவை.

ஆனால் இவையிரண்டும் காலப்போக்கில் மறைந்து போயின.

முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்க வெற்றிகளைப் பற்றிக் கூறும் கலிங்கத்துப் பரணி. இதை ஜெயங்கொண்டார் எழுதியுள்ளார்.

இதில், ராஜபாரம்பரியம் என்கின்ற பகுதியில் விஜயாலய சோழன் முதல் ராஜராஜ சாழன் வரை உள்ள சோழர் வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

ஒட்டக்கூத்தரால் எழுதப்பட்ட மூவருலாவில் ராஜராஜனின் போர் வெற்றிகள் விபரிக்கப்பட்டுள்ளன.

**வாணிபம்**

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே சோழர்கள் கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனா வரை கடல் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

காவிரிப் பூம்பட்டினத்தில் இடைவிடாது ஏற்றுமதியும் இறக்குமதியும் நடந்து கொண்டிருந்ததைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

பல்லவர் காலத்திற்குப் பிறகு, கப்பல் போக்குவரத்து பெருகியதால் கடல் வணிகம் என்பது சோழர்களின் வாழ்க்கை முறையில் முக்கியமான ஒன்றாக மாறியிருந்தது.

மலேசியா,சிங்கப்பூர் உட்பட பல நாடுகளுடன் கடல் வாணிபத் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

ராஜராஜனின் கடற்படை வீரர்கள், காந்தளூர்ச்சாலை கலமறுத்து என்கின்ற போர் நிகழ்வில் சேரர் கடற்படையை முறியடித்து தென்னிந்திய கடல் எல்லையில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள்.

(தொடரும்)

மனித உடம்பு ஒரு நீர்க்குமிழி போன்றது.மனிதன் தன் அகங்காரத்தினால் குருடனாகிறான். மனிதன் எந்த சமயத்திலும் ஒரு மிருகத்தைப் போல நடந்து கொள்ளக் கூடாது. – சீரடி சாய்பாபா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகா சங்கம் அரசாங்கத்துக்கு சங்கடத்தைக் கொடுக்கும்

கர்ணனே தனது மிகப்பெரிய பலம் எனத் துரியோதனன் நினைத்திருந்தான்.

கர்ணனிடம் இருக்கக்கூடிய நாகாஸ்திரம் அவ்வாறானதொரு நம்பிக்கையை துரியோதனனுக்குக் கொடுத்திருக்கலாம்.

எனினும் யார் தன்னுடைய பலம் என்று துரியோதனன் நம்பினானோ அவன் சாபம் பெற்றவனானான்.

ஆம், உற்றபோது கற்றது மறப்பாய் எனப் பரசுராமர் விதித்த சாபம் போர்க்களத்தில் வேலை செய்கிறது.

புதைந்த தேரை மீட்டெடுக்க முடியாமல் கர்ணன் அவஸ்தைப்படுகிறான். அவனின் அறிவாற்றல் மங்கிப் போகிறது.

சாபம் நிறைவேறும் காலம் வந்துற்றது. தர்மம் நிலைநாட்டப்பட வேண்டுமாயின், அதர்மத்தின் பக்கம் நிற்கின்ற தர்மத்தையும் அதர்மமாகக் கருதி அதற்கும் தண்டனை வழங்குவதே அறத்தை நிலைநாட்ட வல்லானின் கருமமாகும்.

கர்ணன் கொடைவள்ளலாக இருந்தபோதிலும் துரியோதனன் பக்கம் அவன் நின்றதனால் அவனின் கொடை வீணாயிற்று.

போர்க்களத்தில் கர்ணன் வீழ்ந்துற்றபோது, துரியோதனனின் தோல்வி எழுதப்பட்டு விட்டது.

எனினும் அதுபற்றி துரியோதனன் சிந்தித்திலன். ஐந்து வீடும் தரேன் என்ற அவனின் மமதை அவனையும் அவன் குலத்தையும் பரிநாசம் செய்தது.

இஃது மகாபாரத இதிகாசம் போதிக்கும் தத்துவம். நான் மட்டும் வாழ வேண்டும்; என் இனம்; என் மதம்; என் மொழி இவற்றுக்கே முதலிடம். மற்றவையெல்லாம் இரண்டாம் நிலை என்று யார் நினைத்தாலும் அஃது கௌரவர் சேனைக்குரிய கர்வமாகவே கருதப்படும் என்பதோடு, பாரத இதிகாசம் போதிக்கும் தத்துவத்தின் ஒரு சிறு பகுதியை நிறைவுக்குக் கொண்டு வரலாம்.

எனினும் இஃது எதற்கானதென்று நீங்கள் கேட்டால்; 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தோடு இலங்கை படும்பாட்டை நினைத்த போது மேற்போந்த தத்துவம் நினைவுக்கு வந்ததால் அதனைச் செப்பினோம்.

இவை ஒருபுறமிருக்க, 20ஆவது திருத்த சட்டமூலத்தை எதிர்க்க வேண்டும். அதனை நிறைவேறாமல் தடுக்க வேண்டும் என பௌத்த மகா சங்கம் போர்க்கொடி தூக்கியுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டால் அது ஜனநாயகத்துக்கு ஆபத்தாகி விடும். சர்வாதிகாரம் தலைதூக்கும் என பௌத்த மகா சங்கம் கூறுகிறதெனில், இருபதாவது சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஆளுந்தரப்பு மிகப்பெரும் சவால்களை எதிர் கொள்ளும் என்பது நிறுதிட்டமாகிறது.

அதாவது யார் இந்த நாட்டை ஆள வேண்டும் எனத் தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கக்கூடிய பௌத்த மகா சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்டால், அதனைத் தாண்டிச் செல்வதென்பது இயலாத காரியமே.

அவ்வாறு தாண்ட நினைத்தால் அதுவே விழுக்காட்டின் அடித்தளமாகும்.

# முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு சிற்பரன் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் செய்தி அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் (ஊடகமும் செயற்றிட்ட ஆக்கமும்) தவச்செல்வம் சிற்பரன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு குமுழமுனை முறிப்பு பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மரக்கடத்தல் மற்றும் காடழிப்பினை செய்தி அறிக்கையிடச் சென்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் பிராந்திய செய்தியாளர்களான சண்முகம் தவசீலன் மற்றும் கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இருவர் மீதும் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் நேற்று முன்தினம் தாக்குதல் மேற்கொண்டதில் இருவரும் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக செய்திகளை அறிக்கையிடுகின்ற செய்தியாளர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றமை பெரும் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறையையும் அச்சுறுத்தலையும் தமிழ் மக்கள் கூட்டணி வன்மையாக கண்டிக்கிறது.

இத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட நபர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தவும் நீதியை பெற்றுக் கொடுக்கவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டுமென தமிழ் மக்கள் கூட்டணி வலியுறுத்துவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது என்பதற்கான உறுதிப்பாட்டினை உறுதிசெய்ய வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் ஊடக சுதந்திரத்துக்கெதிரான நடவடிக்கைகளையும் ஊடகவியலாளர் மீதான அடக்கு முறைகளையும் தமிழ் மக்கள் கூட்டணி எப்போதும் எதிர்க்கும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்படும்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல

(கொழும்பு)

முல்லைத்தீவு, முறிப்பு பகுதியில் சட்ட விரோத மரக்கடத்தல் கும்பலினால் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பக்கசார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

மரக்கடத்தல் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களான குமணன், தவசீலன் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை கடத்தல் கும்பலினால் தாக்கப்பட்டு காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்தி, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தாம் அறிவுறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் நலன்கள் மற்றும் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(ம-3)

# யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் வெடிமருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு அண்மையில் இருந்து ரிஎன்ரி வெடிமருந்து 4 கிலோ கிராம் மற்றும் டெட்டனேற்றர் 10 என்பன சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளன.

"யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் இல்லத்துக்கு அண்மையில் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு பின்புறமாக உள்ள குளத்தின் அருகில் இந்த வெடிமருந்துகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று சிறப்பு அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அதனடிப்படையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் வெடி பொருட்கள் மீட்கப்பட்டன" என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ம-3)

# ரவீந்திரநாத் தாகூரின் ஆன்மீகச் சிந்தனைகள்

## எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு உண்டு

❖ உலக நிகழ்ச்சிகள் யாவும் தற்செயலாக நடக்கின்றன என்று எண்ணுபவன் தன்னிடத்திலேயே நம்பிக்கை இல்லாதவன் என்று தான் சொல்ல வேண்டும்.

❖ ஆண்டவன் இந்த உலகத்தில் நமக்கு எவ்வளவோ சுதந்திரம் கொடுத்திருக்கிறார். அவரது படைப்புகள் அனைத்திலும் ஒரு நியமத்தினை அல்லது ஒழுங்கினைக் காணமுடிகிறது. அதை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்.

❖ இந்த உலகில் உள்ள எல்லாம் ஈசனின் உறைவிடம் என்பதை உணருங்கள். அவன் கொடுப்பதை அனுபவியுங்கள். அதைத் தவிர அதுவேண்டும் இதுவேண்டும் என்று ஆவலில் அலையாதீர்கள்.

❖ பரந்த நோக்கம் மட்டுமே மனிதனை வாழ வைக்கும். அதற்கு மாறாக பொறாமை, முரட்டுச் சிந்தனை, கொடிய பழக்கவழக்கங்கள் எல்லாம் வருங்காலத்தில் நம்மை எதற்கும் தகுதியற்றவர்களாக்கிவிடும்.

❖ எப்போது பிரச்னை என்று ஒன்று தோன்றுகிறதோ அப்போதே அதை தீர்க்கும் வழிமுறை ஒன்றும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையை உணர்ந்தால் தேவையற்ற மனவருத்தம் உண்டாவதில்லை.

❖ லட்சியம் நிறைவேற வேண்டுமே என்ற கவலை இருந்தால் தான் மனத்தெளிவு உண்டாகும். அந்த லட்சியத்தை நோக்கி நம் முயற்சிகள் இருக்கும். அப்போது நம்முடைய ஆற்றல்கள் வெளிப்படத் தொடங்கும்.

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**பொய் சொல்பவன் அதில் தனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்று வருந்துகிறான்.பொய் சொல்வதற்கு முன்பு பிறரை வஞ்சிக்கத் திட்டம் தீட்டுகிறான். அந்தத் திட்டம் வெளியாகி விடுமோ என்று எப்போதும் அஞ்சி,அவன் உள்ளம் பரிதவிக்கின்றது. -மகாவீரர்**

# ஆன்மீகச் சிந்தனைகள்

## கோபமா... கூடவே கூடாது

❖ மனிதன் தன்னைக் காக்க விரும்பினால், எந்த நிலையிலும் கோபம் வராத விதத்தில் நடக்க வேண்டும்.

❖ கல்வி கற்றவர், செல்வந்தர், வயது முதிர்ந்தவர் இவர்கள் யாரும் பெரியவர்கள் அல்ல. பிறரைக் குறை பேசாதவரே பெரியவர்.

❖ நியாயமற்ற வழிகளில் தேடும் செல்வம் நிலைக்காது. அதனால் மன நிம்மதி போய் விடும்.

❖ கல்வி, செல்வ வளம் ஆகியவற்றை வாழ்வில் பெற்றிருந்தாலும், ஒழுக்கம் இல்லாவிட்டால் பயன் உண்டாகாது.

# டிவில்லியர்ஸ் அதிரடி ஆட்டம் கொல்கத்தாவை வீழ்த்தியது பெங்களூர்

ஐ.பி.எல்.தொடரின் 28 ஆவது லீக் ஆட்டம் நேற்று முன்தினம் ஷார்ஜாவில் நடைபெற்றது. இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்- கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

டாஸ் வென்ற ஆர்சிபி பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி தேவ்தத் படிக்கல், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

இருவரும் சீரான வேகத்தில் ஓட்டங்கள் அடித்தனர். தேவ்தத் படிக்கல் 32 ஓட்டங்களிலும், ஆரோன் பிஞ்ச் 47 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

3 ஆவது விக்கெட்டுக்கு விராட் ஹோலியுடன் டிவில்லியர்ஸ் ஜோடி சேர்ந்தார். ஆர்சிபி 15 ஓவரில் 111 ஓட்டங்களே எடுத்திருந்தது. 16 ஆவது ஓவரில் இருந்து டிவில்லியர்ஸ் வாணவேடிக்கையை தொடங்கினார்.

கடைசி ஓவரில் ஒரு சிக்ஸ் உடன் 17 ஓட்டங்கள் கிடைக்க ஆர்சிபி 20 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 194 ஓட்டங்கள் குவித்துள்ளது. விராட் ஹோலி 33 ஓட்டங்களுடனும் டிவில்லியர்ஸ் 33 பந்தில் 73 ஓட்டங்களும் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

195 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

அந்த அணியின் டாம் பேண்டன், ஷுப்மான் கில் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர். ஷுப்மான் கில் மட்டும் தாக்குப்பிடித்து 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.


மற்ற வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். இதனால் கொல்கத்தா அணியின் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் விழுந்தன.



இறுதியில், கொல்கத்தா அணி 9 விக்கெட்டுக்கு 112 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் பெங்களூர் அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பெங்களூர் அணி சார்பில் வோஷிங்டன் சுந்தர், மாரிஸ் தலா 2 விக்கெட்டும், நவ்தீப் சைனி, மொகமது சிராஜ், சஹல், உடானா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (4)

# உலக டென்னிஸ் தரவரிசையில் ஜோகோவிச் தொடர்ந்து முதலிடம்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் முடிவில் உலக டென்னிஸ் வீரர், வீராங்கனைகளின் தரவரிசைப்பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தோல்வி கண்ட செர்பிய வீரர் நோவக் ஜோகோ விச் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 2 ஆவது இடத்திலும், கால் இறுதியில் தோல்வி அடைந்த ஆஸ்திரியாவின் டொமினிக் திம் 3 ஆவது இடத்திலும், காயம் காரணமாக போட்டியில் பங்கேற்காத சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 4 ஆவது இடத்தில் மாற்றமின்றி தொடருகின்றனர்.

அரை இறுதிக்கு முன்னேறிய கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் ஒரு இடம் ஏற்றம் கண்டு 5 ஆவது இடத்தையும், ரஷ்யாவின் டேனில் மெட்விடேவ் ஒரு இடம் சரிந்து 6 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். (4)

# ஐ.பி.எல்.போட்டிகளை மையமாக வைத்து நடைபெறும் சூதாட்டம்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளை மையமாக வைத்து கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டிகள் டுபாய், அபுதாபி, ஷார்ஜா ஆகிய நகரங்களில் நடந்து வருகின்றன.

இப்போட்டியின் வெற்றி, தோல்வியை மையமாகக் கொண்டு சூதாட்டம் நடத்தப்படுகிறது.

அபுதாபியில் அண்மையில் கொல்கத்தா - பஞ்சாப் அணிகளுக்கு இடையே போட்டி நடைபெற்றது.

இப்போட்டியை மையமாகக் கொண்டு, கோவை பூலுவப்பட்டி பகுதியில் சூதாட்டம் நடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் ஒரு கடையில் நான்கு பேர் சூதாட்டத்தில் ஈடுபட்டதை கண்டுபிடித்து விசாரித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 34 - 42 வயதுடைய நான்கு நபர்களை கைது செய்து பின்னர் பிணையில் விடுவித்தனர்.

அவர்களிடம் இருந்து, தொலைபேசிகள் மற்றும் 3200 ரூபாய் பணமும் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது. (4)



காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற அதிபர் சு.திருக்கேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றதுடன் வட்டுக்கோட்டை நியூ ட்ரீம்ஸ் விளையாட்டுக்கழக அணி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

## ரொனால்டோ...

உலகின் முன்னணி கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக போர்த்துக்கல் கால்பந்தாட்ட கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனினும் ரொனால்டோ கொரோனா தொற்று தொடர்பான எந்த அறிகுறிகளையும் வெளிகாட்டவில்லை என்றும் போட்டிகளிலிருந்து விலக்கப்பட்டு சுய தனிமைப்படுத்தலுக்காக அவரது வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் போர்த்துக்கல் கால்பந்தாட்ட கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## மணிவண்ண...

யின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு கட்டளை வழங்குமாறு கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு நேற்று மீள கையேற்கப்பட்டது.

பிரதிவாதி விஸ்வலிங்கம் மணிவண்ணன் அவருடைய கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அதனால் இந்த மனுவின் ஊடாக நீதிமன்றின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அதனால் வழக்குச் செலவு இன்றி மனுவை மீளப்பெற மனுதாரர் முடிவு செய்துள்ளார் என்று மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றுரைத்தார். மணிவண்ணன் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட விடயத்தை நான் அறியவில்லை.

ஆனால் மனுதாரரின் விண்ணப்பத்துக்கு ஆட்சேபனையில்லை என்று மணிவண்ணன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றுரைத்தார்.

அதனால் மனுதாரரின் விண்ணப்பத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு அனுமதியளித்தது. (ம-3)

## பொலிஸ்மா அதி...

சென்றதன் அடிப்படையில் பொது நிதிகளை குற்றவியல் முறையில் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறுதல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் ரிஷாட் பதியுதீனை கைது செய்ய சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

2019 நவம்பர் 17 ஜனாதிபதித் தேர்தலின் போது புத்தளம் மாவட்டத்திலிருந்து வாக்காளர்களை இ.போ.ச. பேருந்தில் மன்னாருக்கு அழைத்து வந்து வாக்களிக்க அப்போதைய அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ஏற்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வாள்களுடன்...

கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## 9 பேருக்கு...

களில் இயக்கச்சியில் தனிமைப்படுத்தலிலுள்ள ஒன்பது பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வட மாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்ட 285 பேருக்கான மாதிரிகளில் குறித்த பரிசோதனைகள் நடத்தப்பட்டதாகவும், ஏனைய 276 பேருக்கும் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3,18)

## கத்தோலிக்க...

திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அது தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என ஆயர்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையைச் சேர்ந்த பதுளை மாவட்ட ஆயர் வண. வின்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் கொழும்பு மாவட்ட ஆயர் வண. அந்தோனி ஜெயக்கொடி ஆகியோரின் கையொப்பத்துடன் நேற்று விசேட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மக்களின் இறைமை அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன், 20ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முன்னர் அதனை விரிவாக ஆராய வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து அதிகாரங்களும் தனி ஒருவர் வசமாவது ஜனநாயக நாட்டிற்கு பாதகமான விடயமாக அமையும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## உடுவிலில் வீதி...

தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உடுவில் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் வீதியால் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணை மோட்டார் சைக்கிளில் சென்ற இனம்தெரியாத நபர்கள் பின்தொடர்ந்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் மக்களின் நடமாட்டமில்லாத பகுதியில் வைத்து குறித்த வயோதிபப் பெண்ணைத் தாக்கி அவரது கழுத்திலிருந்த நான்கு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பில் குறித்த வயோதிபப் பெண் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-3,18)

## அத்தியாவசிய...

ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ச.தொ.ச விற்பனை நிலையங்களில் தேங்காயை சாதாரண விலையில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மாப்பிள்ளை...

பகுதியைச் சேர்ந்த யுவதிக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, குறித்த பதிவுத் திருமணத்துக்குச் சென்ற கணவர் உட்பட 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பதிவுத் திருமணத்துக்காக கடந்த 2ஆம் திகதி மினுவாங்கொடைக்குச் சென்றமை தெரியவந்துள்ள நிலையில் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பியகம நிர்வாக பொது சுகாதார ஆய்வாளர் தெரிவித்தார். (ம-3)

## 21 மாவட்டங்...

கொழும்பில் மாத்திரம் மினுவாங்கொட கொத்தணியுடன் தொடர்புடைய 160 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் சனத்தொகை அதிகம் என்பதாலேயே இவ்வாறு அதிக எண்ணிக்கையான தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டி...

களில் 48 பேர் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் எனவும் ஏனைய 146 பேரும் குறித்த தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரை மினுவாங்கொட கோவிட்-19 தொற்று கொத்தணியில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 591ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஐயாயிரத்து 38ஆகப் பதிவாகியுள்ளது. (ம-3)




**Alto கார் வாடகைக்கு தேவை**

Alto கார் மாதாந்த வாடகைக்குத் தேவை (4263)

தொடர்பு:- 075 090 6486

**விற்பனைக்கு**

இரண்டு மாத மர உழுந்து விதை, நல்லின தென்னம்பிள்ளை என்பன விற்பனைக்குண்டு. (C-521)

தொடர்பு:- 077 330 1798

**மெகா பவர்**

திகதி 13/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0641

வெற்றி எழுத்து, சுப்பர் இலக்கம், வெற்றி இலக்கங்கள்: B 16 15 45 57 59

**நீரோகா**

திகதி 13/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0711

லக்கினம் துலாம்; வெற்றி இலக்கங்கள் 10 33 62 65

**மஹஜன சம்பத**

திகதி 2020/10/13
சீட்டிழுப்பு இலக்கம் 4274

O 1 8 5 8 2 1

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 13-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2569

ஆங்கில எழுத்து G; வெற்றி இலக்கங்கள் 13 21 44 54

**தன நிதானய**

திகதி - 2020.10.13
சீட்டிழுப்பு இலக்கம் - 328

G 13 28 29 74 (ஆங்கில எழுத்து, வெற்றி இலக்கங்கள்)

**ராசி அதிர்ஷ்டம்**

திகதி 13/10/2020 — வெற்றி வாரம் 2951
சுப்பர் ஜக்பொட் ரூ. 32,47,172 — வர்ணம் சிவப்பு

வெற்றி இலக்கங்கள் 08 30 38 50 — கடகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

டபள் விசேட இல. ரூ.500 பரிசுக்குரிய 9394; ரூ.100 பரிசுக்குரிய 802

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,106,540

**அத கோடிபதி**

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1070
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.10.13

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 77,953,730/-

வெற்றி இலக்கங்கள் 03 07 46 76 — ஆங்கில எழுத்து C

ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7863
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 264

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா**

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.13
சீட்டிழுப்பு இல. : 3400
வர்ணம் : இளநீலம்

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,443,351.70

வெற்றி இலக்கங்கள் 18 19 33 38 — ஆங்கில எழுத்து Q

ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7611

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 1244 — நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 13.10.2020 — தினம் செவ்வாய்க்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: L 10 28 35 54

53,704,288.80

SUPER 500 விசேட இலக்கம் 8 3 8 2

**ஜயோதா / கப்ருக**

F 24 36 47 79

சீட்டிழுப்பு வாரம் 637
13.10 2020 செவ்வாய்க்கிழமை

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,159,375

தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (4320)



## மணமகள் தேவை

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)

Jeyaratnam1988@gmail.com 077 219 4331



## வகுப்புக்கள்

German, Swiss
செல்வோருக்கான Personal
வகுப்புக்கள். A1 பரீட்சைக்குரிய
இலகுவான வழிகாட்டலுக்கு. (C-391)

தொடர்பு
076 401 8564


## மணிவிழா வாழ்த்துக்கள்

**( 14.10.2020 )**

திருமதி
**பரிமளாதேவி**
**குருச்சந்திரநாதன்**



Congrats!

| சேவை விபரம் | ஆரம்பம் | முடிவு |
|---|---|---|
| - யா/புங்குடுதீவு துரைசுவாமி வித்தியாலயம் | 1989.11.27 | - 1992.02.21 |
| - யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயம் | 1992.02.22 | - 1997.02.02 |
| - கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை | 1997.02.03 | - 1998.12.31 |
| - யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயம் | 1999.01.01 | - 2005.05.10 |
| - யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம் | 2005.05.11 | - 2015.02.15 |
| - யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை | 2015.02.16 | - 2020.10.14 |

**மொத்த சேவைக்காலம் 30 வருடங்கள் 10 மாதங்கள்**

ஓய்வு காலத்தில் தன் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடனும் சந்தோசமாக வாழ வாழ்த்துகின்றோம்.

**யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை** (4261)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், வசாவிளான், குட்டியபுரம் அம்மன் கோவில் முன்பாக மெயின்றோட் டுடன் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். ஒரு பரப்பு மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (350,000/-) (4264)

தரகர் தேவையில்லை.

076 640 0974, 076 888 4625
077 998 6806



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-308)



## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1250/= (C 514)

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலண்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது

இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | |
|---|---|---|---|---|
| 976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துணுக்காய் மன்னார்/வவுனியா |



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## ENGLISH CLASSES

**Gr. 1 to O/L**

**Grammar with Syllabus**

(வீடு வந்து கற்பிக்கப்படும்.) (4257)

T.P : 077 331 4608



## கணித பாட வகுப்பு

தரம் 6 - 11 வரையான மாணவர்களுக்கு
தேசிய பாடசாலை ஆசிரியரினால்
கணித பாடம் வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும்.
O/L கணித பாடத்தில் பின்தங்கிய மாண வர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு சித்திக்கு இலகு முறையில் கற்பிக்கப்படும். (4252)

077 725 1297


## அகவை நாள் இனிய வாழ்த்து



கலாநிதி ஸ்ரீமதி
**மனோன்மணி சண்முகதாஸ்**

" உலகாண்ட நாயகியாய் காட்சி தந்தாய்
உக்கிரமமாய் தாண்டவமும் ஆடிக்கொண்டாய்
சிலகாலம் சிவன்நோக்கி நிட்டைகொண்டாய்
சீட்டர்களுக்கு அபயகரம் நீட்டிநின்றாய்
பாலவாய தருமங்கள் போதித்தாண்டாய்
பக்குவமாய் என்பாச வினை நீக்கினாய்
நலம்சேரும் மனோன்மணி சண்முகதாஸ் தனை
அருளோடு பொருள் கொண்டு ஆள்வாயே "

Best Wishes (C-520)


**- சுபமஸ்து -**

தும்பளை - நெல்லண்டை
பத்திரகாளி அம்பாள்
( இத்திமரத்தாள், மாமரத்தாள் )
அடி பணிந்து வாழ்த்துகிறேன்.

அன்னையின் அடியார்
சிவஸ்ரீ. தியாக.
சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
சைவ சித்தாந்த பண்டிதர்
( ஆதீன கர்த்தா )

077 620 2716

## 15ஆம் ஆண்டின் நினைவலைகள்



அன்னை மடியில்
**26.04.1953**

ஆண்டவன் அணைப்பில்
**01.10.2005**

அமரர்
## பொன்னுத்துரை சரவணபவன்

(ராசா - மண்டைதீவு - 6)

திதி - அபரபக்க திரயோதசி

" பாதியிலே எமைவிட்டு
பரமன் அடி சென்று நீங்கள்
பதினைந்து ஆண்டுகள் வந்தது அப்பா.
பாலர் நாம் வளர்ந்து விட்டோம்
பரவசமடைய பாரினில் நீ இல்லை.
அன்புடனே எமை அழைத்து அள்ளி அணைத்து
அனைத்தும் தந்து நின்ற அப்பம்மாவும் அம்மம்மாவும்
கூடவேவந்து சேர்ந்த குதூகலத்தில் உள்ளீரோ!
நீ இல்லா துயர் துடைக்க நித்திலத்தில்
யாரும் இல்லை. மறு பிறப்பு நிஜமென்றால்
மீண்டு வந்து சேர்ந்திடப்பா- எம் துயர்
தீர்ப்பதற்கே "

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உங்கள் ஆத்ம சாந்திக்காய்
அனுதினமும் இறையருள் வேண்டிநிற்கும்
குடும்பத்தினர்

59, பொற்பதி வீதி,
கொக்குவில். (4260)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.